ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, 1--12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 ச்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு ஆடி-மீ 2-உ ( 17—7—1932) | மலர் 12.

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,

அவர்கள் எழுதிய

## "கடவுளும் பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல் கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதீக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர் சிறந்த நூல். பகுத்தறிவு வளர்ச்சியும், உலக முற்போக்குமடைந்துள்ள இதுகாலை, அஞ்ஞானத்திலும், மூடபக்தியிலும் கிடந்துழலும் நம் மக்கள் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டுமென்றே கூறுவோம். அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள். ஒருவாரத்தில் கிடைக்கும்.

சுமார் 100 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்.

மானேஜர்,

குடி அரசு புக்டிபோ, ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. பகுத்தறிவேவிடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... 0—6—0
5. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
6. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
7. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0
8. மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
**ஈரோடு.**



## ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)
பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை

## Read.
## *The 'Citizen'*

and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic. Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசு"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தகரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

## தாது புஷ்டிக்கு
## "கெய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான கற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனமாக அனுப்புகிறோம். விலாசம்:
ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.
ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
,, வெளிநாடு 1—8—0.
மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
230-30வது வீதி ரெங்கூன்.

### சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலுபி.ஏ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம்,தீண்டாமைஒழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.
கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## தேவை.

தஞ்சை, நாகை, திருவாரூர் தவிர மற்ற ஒவ்வோர் இடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை. மாதச்சம்பளம் ரூ 25. கொஞ்சம் படிப்பிருந்தால் போதுமானது. விபரத்திற்குடனே 0—1—3 ஸ்டாம்புடன் எழுதவும், சமயத்தை கைவிடாதீர்.

டி. எஸ். நாராயணசாமி.
வடக்குதெரு.
திருவள்ளூர்.

### குஷ்டம்

வெண்குஷ்டம் - பத்து.
சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.
Post Box No- 11413
Calcutta- (k)

## ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Restore youthful retaintive & erective capacity & insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual intercourse. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 60 Pills Rs 8 only Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To:

*SAILASRAM (K)*
*Chandanpur (Khulna)*
*E. B. R.*

குறிப்பு:—

("நம்பிக்கை யீனத்தால் மனித சமூகம் அடைந்துள்ள இலாபம்" என்ற தலைப்பின் கீழ் வரையப்படுங் கட்டுரையும், அதனைப் பின் தொடர்ந்து எழுதப்படும் கட்டுரைகளும் பெயர் பெற்ற ஆங்கில நாத்திகரான திரு. சால்ஸ் பிறைட்லோ என்ற பேரறிஞரால் எழுதப்பட்டவை. அப்பெரியார் "கடவுள்" இல்லை என்று இக்கட்டுரைகளின் மூலம் எண்பிப்பதன்றி ஆத்திகச் சமயங்களின் தலை சிறந்ததெனவும், அகில உலக சமயமெனவும் பறை சாற்றப்படும் கிறிஸ்துவம் எவ்வாறு மக்களது ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் தடையாயும், முட்டுக்கட்டையாகவுமிருந்ததென்பதைத் திட்டமாய்க் காண்பிக்கிறார். அன்னார் தன் வாழ்நாளை மக்கள் பணிக்கென்றே செலவிட்டார். அவரது பேச்சும், எழுத்தும் மக்கட்குப் பயனளிக்கும் நோக் நோக்கத்தோடேயே செய்யப்பட்டன. ஆயினும் ஆத்திகப் பித்தரான பாதிரிகள் அவரை "நாத்திகன்" என்று இழித்துக் கூறியதன்றி பழிச் சொற்கள் பலவும் அவர்மீதேற்றினர். அவர் நமது சென்னை அடையாற்று அம்மையார் அன்னி பெசன்டோடு உடன் ஊழியனாய் (Co-worker) யிருந்தார். அது காலை அம்மையார் தனது கணவனை (Rev Beasant) விட்டுப் பிரிந்திருந்தார். திரு. பிறெட்லோவின் மனைவி குடிகாரியாயும், அறிவிலியாகவுமிருந்தமையால் அவருக்கும், அன்னிக்கும் இடையே காதலுணர்ச்சி உண்டாயிருந்தது. அதைச் சாக்காக வைத்துக் கொண்டு பாதிரிகள் அவரைக் கண்டபடி தூற்றினர். ஆனால் அவர் மிகக் கௌரவமாகத் தன் வாழ்க்கையை நடத்தினார். தனது கொள்கையை மாற்றினாரல்லர். அவரது அன்பி அன்னி பெசன்டோ அவ்வாறன்றிப் பன்முறை மாறியாடினார். "நாடு நலம் பெறவேண்டுமாயின் நாத்திகம் பரவ வேண்டும்" என்று நம்பும் தன் மதிப்பியக்கத்தினர், நாத்திகத்தைப் பற்றியும், அதன் சிறப்பைப்பற்றியும், நன்கறிந்திருத்தல் அவசியமாகலின் இக்கட்டுரைகள் "குடி அரசு"வில் வெளிவருகின்றனம்.)

# நம்பிக்கையீனத்தால் மனித சமூகம் அடைந்துள்ள இலாபம்.

## (Humanity's Gain From Unbelief.

(*By Charles Bradlaugh*)

[சாமவேதனர்]

நானோர் நம்பிக்கையற்றவன் (Unbeliever) மனித சமூகம் நம்பிக்கை யீனம், ஆசங்கை, சந்தேகம் ஆதியனவற்றால் அதிக நலன்களையடைந்துள்ளதென்பது எனது திடநம்பிக்கை. அஃதெப்படியென்று காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். கிறைஸ்துவத்தையும், அதற்கு முற்பட்ட ஏனைச் சமயங்களையும் உதவாதவையென்று உதறித் தள்ளிவிட்டதால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மதங்களனைத்தும் அறுப்புண்டு போய் விடில் உலகில் அமைதியும், அன்பும் தாண்டவமாடும் என்பதுறுதி. விஞ்ஞான அறிவுக்கு விதை சந்தேகமேயாகும். "சந்தேகம் ஞான விரோதி" என்று எவரோ சொன்னார். ஆனால் "சந்தேகம் உலக உபகாரி" என்கிறேன் யான். சமயங்களைப்பொருத்த அளவில் சந்தேகமில்லாவிடில் முன்னேற்றமேயிராது. இங்கே சமயம் என்றால் இயற்கைக்கு மாறுபாடானதும், அப்பாற்பட்டதுமானவற்றில் நம்பிக்கை வைக்கும் படிப்போதிக்கும் எல்லாக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் குறிப்பிடுகிறேனென்றறிக.

சமயங்களனைத்தும் மாறியே வருகின்றன. அடிக்கடி மாறுகின்றன. சமய வாதிகளது அறிவு வளர்ச்சி, தேர்ச்சி, முன்னேற்றங்களுக்குத் தக்கபடி மதம் மாறுதலடைகின்றது. எனவே சமயம் அல்லது மதம் மக்களை நாகரீகப் படுத்துகின்றதென்ற கொள்கை இங்கு அடிபடுதல் காண்க. மக்களே தமது நாகரீகத்திற்கும் சீர்திருத்தத்துக்கும் இயைய தத்தம் சமயங்களைத் திருத்துகின்றனர். அல்லது புதுப்பிக்கின்றனர். விஞ்ஞான விந்தைகளும், புதிய கண்டு பிடிப்புகளும் பழங் கொள்கைகளைத் தாக்குகின்றன. சில சமயக் கொள்கைகள் முழுவதுமாயும், பல பகுதிகளாயும் நொறுக்கப்படுகின்றன. ஒரு சமயமும் ஒரே மூச்சில் ஒழிக்கப்படவில்லை. ஆயின் மெல்ல மெல்ல ஒழிவதுறுதி. மதங்கள் அறவே அழிவதைக் காண்பதரிது. உயிரற்ற மொழிகள், சம்பிரதாயங்களைப்போல பழஞ் சமயங்களும் புதியவற்றிற் புகுந்து கொள்ளுகின்றன. இலத்தீனும், சமஸ்கிருதமும் (வட மொழி) தற்கால மொழிகளில் விரவி நிற்றல் போன்றே வழக்கிழந்த பழஞ் சமயங்கள் புதுச் சமய பண்டிகைகள், சடங்குகள், கோட்பாடுகள்முதலியவற்றில் அடைக்கலம் புகுந்துள்ளன. அவற்றைக் கதைகள் புராணங்களிலும் காணலாம்.

எனது கட்டுரையின் நோக்கம் தெளிவாய் விளங்கப் பெற்று அது பயன்தர வேண்டுமாயின், கிறைஸ்துவம் என்றால் என்ன வென்பதை முதலில் வரையறுத்துக் கொள்ளுதல் வேண்டும்! கிறைஸ்துவம் எத்தகையது என்று திட்டமாய்க் கணிக்க முற்படும் பொழுதே நம்பிக்கையீனத்தைப் பற்றியும், அதன்விலையைப் பற்றியும் அறிதல் கூடும். எங்ஙனமெனின் கிறைஸ்தவத்தின் பல்வேறு பிரிவுச் சமயங்களின் ஒன்றுக்கொன்று ஒவ்வாதனவும், மாறுபட்டனவுமான கொள்கைகளென்க. கிறைஸ்தவம் என்ன விதமானதென்பதை உரோமன் கத்தோலிக்க கிரேக்க வைதிக என்ற இரு பெரும் பழஞ் சமயப் பிரிவுகளிருந்தாதல், தற்கால சீர்திருந்திய புதிய சபைகள் பல வற்றிலிருந்தாதல், அறியலாகும். சென்ற சில நூற்றாண்டுகளுக்குள் நூற்றுக்கணக்கான பிரிவுகள்கிறைஸ்தவத்தில் முளைத்திருக்கின்றன. காரணமென்னையோ. எட்டுணையும் தடையின்றி ஆசங்கையும், ஐயமும், சந்தேகமும் நம்பிக்கையீனமுமென்கின்றேன். இச்சபைகளொவ்வொன்றும் தங்களைக் "கிறைஸ்தவ" என்று சொல்லுகின்றன. சிலசபைகள் மற்றச்சபைகளுக்கு 'கிறைஸ்தவ' என்றழைக்க உரிமையில்லையென்கின்றன. சில பிறவற்றை "பதித" "நம்பிக்கையற்ற" என்ற அடைமொழிகளால் இழித்துக் கூறுகின்றன. பெரிய பிரித்தானியாவிலும், ஐர்லாந்திலுமுள்ள உரோமன் கத்தோலிக்கரும், புரோட்டெஸ்டாண்டரும் ஒருவருக்கொருவர் மிகக் கொடுமையாயும், குரூரமாகவும் நடந்து கொண்டு வந்திருக்கின்றனர். ஆங்கிலப் புரோட்டெஸ்டாண்டரால் 17ம் 18ம் நூற்றாண்டுகளில் இயற்றப்பட்ட மிகக் கொடிய சட்டங்கள் ஆங்கிலேய ஐர்லாந்திய உரோமன் கத்தோலிக்கரால் சகிக்கொணாதவையாகும். அவை நாகரீகத்திற்கே பெருங்கரையாகும், மானக்கேடாகும். அக்கொடிய சட்டங்களே ஐர்லாந்தில் அமைதியின்மையையும், அரசியற் புரட்சிகள், குழப்பங்களையும்தோற்றுவித்தன.

குறித்த அக்கொடிய சட்டங்களை அகற்றியதார்? ஆங்கில சபையானது போப்படியார் [Popists] மாறுபட்டோர் [Dissenters] யூதர்கள், பதிதராதியோருக்கு மாறாக இயற்றியிருந்த கொடுஞ் சட்டங்களை தாராளச்சிந்தையுடைய சந்தேகிகளே நீக்குதற்கு முயன்றனர். ஒன்றன் பின்னொன்றாய் அவை ஒழிந்தமைக்கு நம்பிக்கை யீனமேகாரணம். கிறைஸ்தவருக்குள்ளேயெப்பொழுதும்குதர்க்கமும், குழப்பமும் சண்டையுமே குடிகொண்டிருக்கின்றன. அவருக்குள்ள தாழ்மையையும், தாராளச்சிந்தையையும் காண்பதரிது. ஆங்கில சபையினின்றும் மாறுபட்டு விலகினசபையாருக்கு Dissenters or non-conformists விரோதமாய் ஆங்கில சபைப் பிரார்த்தனைப் புத்தகத்தில் பிரார்த்தனைகளிருக்கக் காணலாம். அன்றியும் ஆங்கில சபை கொள்கைகளுக்கு இணங்காதோராய் விலகியோடியவர் "பாவிகள்" எனவும், "அவர் தமது பாவ உணர்ச்சிகளுக்கேற்பவும், தீய எண்ணங்களைத் தழுவியும் தான், கடவுளை வணங்குகின்றனர். எனவே அவரது வணக்க முறை விக்கிரக ஆராதனைக் கொத்தது" என்றும் ஆங்கில சபைக் குருக்கள் கூறுகின்றனர், இனி, என்றைக்காதல் ஆங்கில சபைக் கிறைஸ்தவரும் அதற்கு மாறுபட்ட "இணங்காத" சபையினரும் ஒருங்கு கூடிக் "கடவுளை" வணங்குகையில் "ஒருத்துவ அல்லது ஏகத்துவ" [Unitarians] மார்க்கத்தினரை வெறுத்தொதுக்குகின்றனர். அவர் தம்மைக் "கிறைஸ்தவர்" என்றழைக்கத் தானும் உரிமையில்லை என்கின்றனர். (குறிப்பு:—வைதிக அவைதிக கிறைஸ்தவரனைவரும் "கடவுளை" மூன்று கூறாக்கி (பிதா-குமாரன்-பரிசுத்த ஆவி) பிறகு ஒன்றாகப் பொருத்திரித்துவக் கடவுள் [Holy Trinity] என்ற விநோதக் கணிதமுறை (மூன்று ஒன்று; ஒன்று ஒன்று மூன்று ஆனால் மூன்றல்ல ஒன்றே) யை யேற்படுத்தி அதில் நம்பிக்கை வைத்து வருகின்றனர். ஆயின் ஒருத்துவ அல்லது ஏகத்துவ மார்க்கத்தினரோ [Unitarians] அதை மறுத்து ஒரே கடவுள் வாதஞ் செய்கின்றனர். அவர் கிறைஸ்துவைக் "கடவுள்" என்று போற்றுவதில்லை. நமது நாட்டு பிரம்ம சமாஜத்தினருக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. "கட்டுண்ட இந்தியா" [India in bondage] என்ற நூலை ஆக்கிய பண்டிதர் சண்டர்லண்ட் [Dr. Sunderland] அக்கிறைஸ்தவ மதம்பிரிவைச் சார்ந்தவர்.)

17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் "நடுங்குவோர்" [Quakers] என்ற கிறைஸ்தவ சமயப் பிரிவினரை இங்கிலாந்தில் "தெய்வ நிந்தனைக்காரர்" என்று குற்றஞ்சாட்டிக் கட்டி வைத்துக் கசையடி கொடுத்து வந்தனர். (குறிப்பு;—கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை உண்மையாகப் பின்பற்றுவோர் "நடுங்குவோர்" [Quakers] அல்லது "நண்பர்கள்" [Friends] என்ற பிரிவினரே அவர்களுக்குள் குருத்துவமும் சடங்கும்இல்லை. உண்மையில் 'கிறிஸ்தவ" என்ற அடைமொழிக்கு அவர்களே உரிமையும் அருகதையுமுடையோர். அவர்கள் ஆயுதந்தரித்துப் போர் புரிய மறுக்கின்றனர். நீதிமன்றத்திற்குப் போய் வழக்காடுவது மில்லை. பழைய இங்கிலாந்தில் தான்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

# சிராவயல் ஆண்டுவிழா.

## திருமதி எஸ். நீலாவதி—ராமசுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

### ஏராளமான பெண்கள் கூட்டம்.

சிராவயல் காந்தி வாசகசாலை எட்டாவதாண்டு விழா நாளது ஜூலை மாதம் 7-ந்தேதி வியாழக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு, இவ்வூர் சரஸ்வதி வித்தியாசாலை ஹாலில் திருமதி நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்கள் அவைத்தலைமையின்கீழ் நடைபெற்றது. வித்தியாசாலை ஹால் நன்கு அலங்கரிக்கப் பெற்றிருந்தது. தலைவரவர்களையும், மற்ற அன்பர்களையும் திருவாளர் மு. கா. காசிவிஸ்வநாதன் செட்டியாரவர்கள் கட்டிடத்திலிருந்து அழைத்துவரப்பெற்றது. உள்ளூர், ஆத்தங்குடி, ஆ. முத்துப்பட்டினம், காரைக்குடி, கொத்தமங்கலம், அமராவதிபுதூர், ஜெயங்கொண்டபுரம், ராயவரம், கண்டனூர், நாச்சியார்புரம், தேவகோட்டை, கீழச்சிவல் பட்டி முதலிய ஊர்களிலிருந்து பல தன வணிகவாலிபர்களும், பெண்களும் விஜயம் செய்திருந்தார்கள். சுமார் 1000 ஜனங்களுக்குமேல் கூடியிருந்தார்கள். திருவாளர் மு கா. காசிவிஸ்வநாதன் செட்டியாரவர்கள் தலைவரைப்பிரரேபிக்கையில்: "இன்று நடைபெறவிருக்கும் ஆண்டு விழாவைபவத்திற்கு திருவாளர் செல்வியரான நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்களைத் தலைமைவகிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் வெறும் பேச்சாளிமட்டுமல்ல. சுயமரியாதை இயக்கத்திலும், மற்ற பொதுஜன நல்லியக்கங்களிலும் தங்கள் உண்மையான பணியைச் செய்பவர்களாகும். அவர்களை பொதுவாக தமிழ் நாடும், சிறப்பாக செட்டிமார் நாடும் நன்கறியும். தங்கள் மனதில் உண்மையாகத்தோன்றும் எந்த விஷயங்களையும் யாருக்கும் அஞ்சியோ, அல்லது வேண்டுமென்றோ கூட்டிக்குறைத்துக் கூறக் கூடியவர்களல்ல. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு செட்டிமார் நாட்டில் சீர்திருத்தவாதிகள் மனதில் எண்ணியதை இப்பொழுது நிறைவேற்றுபவர்களாகும். அவர்கள் நமது விழாவிற்கு தலைமை வகிக்க இயந்தமைக்கு வாசகசாலையின் சார்பாக நன்றி செலுத்தி இவ்விழாவை இனிது நடத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று கூறினார். தலைவர் ஆசனத்தமர்ந்ததும் இருமாணவர்களால் பாரதியார் கீதங்கள் பாடப்பெற்றன. பின்பு தலைவர் முகவுரையின் சாரம் பின்வருமாறு:—

முகவுரை.

சகோதரர்களே! சகோதரிகளே!!

இங்கு நடைபெறும் விழாவிற்கு என்னைத்தலைமை வகிக்குமாறு விரும்பிய உங்களுக்கு எனது வந்தனம். பெண் சமூகம் அடிமைப்பட்டிருக்கும் இந்நாளில், சந்தர்ப்பங்கருதி அவர்கள் முன்னேற்றத்துறையில் கவனம் வைத்து பெண்கள் முன்னேற்றமடையச் செய்யவேண்டியது ஒவ்வொரு வாலிபர்களின் கடமையாகும். இன்றைய விழாவில் பெண்கள் சமூக நலன் குறித்துப்பேசுவதற்கு ஓர் நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்ததானது செட்டிமார் நாடு மிக விரைவில் சீர்திருத்தமடைந்துவிடும் என்பதற்கு அறிகுறி என்றே எண்ணவேண்டியிருக்கிறது. செட்டிமார் நாட்டில் சில ஆண்டுகளாய் நடைபெற்ற சீர்திருத்தவேலைகளால் இளைஞர்கள்தான் முன்னேறியிருக்கிறார்களே யன்றி, பெண்கள் முன்னேறினார்கள் என்று சொல்லுவதற்கில்லை. பெண்கள் முன்னேறுவதற்கு ஒவ்வொரு வாலிபர்களும் தியாகம் செய்தாகவேண்டும், வீண் ஆடம்பரங்களில்மயங்குதல் கூடாது, தங்களின்வாழ்க்கை சிக்கனமாக நடைபெற அமைத்துக்கொள்ளவேண்டும். பெண்சமூகம் முன்னேறுவதிலேயே வாலிபர்கள் கருத்தாயிருத்தல் அவசியமாகும். மற்ற முன்னேற்றமடைந்த எந்த தேசம், நாடுகளிலும் பொதுவாக இளைஞர்களும் சிறப்பாகப்பெண்களும் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி நம் நாட்டிலும் கவனம் செலுத்தவேண்டுவது மிக்க அவசியமாகும். வீண் ஆடம்பரக்காரர்களும், சுய நலக்காரர்களும், வீண் பெருமை பேசுபவர்களும், ஏமாற்றி வயிறு வளர்ப்பவர்களும் நாட்டிலிருந்து ஒழிக்கப்படவேண்டும். நமது நாட்டில் பெண்களுக்கு கல்வி வசதி குறைவாக இருப்பதோடு சென்ற சில ஆண்டுகள்வரை பெண்களுக்குக் கல்வி வேண்டியதில்லை என்று கூறும் அசட்டு வைதீகர்களும் இருந்திருக்கிறார்கள். இப்பொழுது அம்மாதிரி கூறுவதற்கு பயப்படுகிறவர்கள் வேண்டுமானால் இருக்கக்கூடும் அவர்களைப்பற்றிக் கவலையில்லை. நமது அருமைக்குழந்தைகளைக் கற்காமல் பாழாக்கிவைக்கப்படுகிறதை ஒழிக்கவேண்டும். கல்வி மலரை நுகரும் தன்மை நமது குழந்தைகள் பெற்றால் நாடு முன்னேறுவதற்கு ஒருதடையுமிராது. பெற்றோர்கள் சிறுவர் சிறுமியரை பள்ளிக்கனுப்பி பயிலச் செய்யவேண்டுமெனக்கேட்டுக்கொள்ளுகிறேன்."

பின்பு மாணவர் மாணவிகளின் பாட்டு, பேச்சு, நடிப்பு நடைபெற்றது.

இருமாணவிகள் பாலிய விவாகம் மிக கொடுமையானதென்றும், அதை அடியோடு ஒழிக்காவிடின் மிகுந்த துன்பம் உண்டு எனவும் பால்மணமாறு பச்சிளங்குழந்தைகளுக்கு மணமாற்றுதல் கெட்ட பழக்கமென்றும், யாவரும் மனமிளகுமாறு உணர்த்தி சம்பாஷித்தனர் பின்னர் மாணவர்கள் ஒருவரால் தீண்டாமையொழிய வேண்டுமெனவும்,ஜாதி வித்தியாசத்தை அடியோடு ஒழித்து சமபந்திபோஜனம் செய்ய வேண்டுமெனவும, ஆலயப்பிரவேசம் தீண்டப்படாத சகோதரர் சென்று உரிமையடைய வேண்டுமெனவும் பேசினர். பின்பு திரு. அரு. சோமசுந்திரன் அவர்கள் "கல்வி வளர்ச்சி" என்பதுபற்றிப் பேசியதின் சாரம்:-

சபைத்தலைவியவர்களே!

சகோதர சகோதரிகளே!!

இப்பொழுது நான் பேசவேண்டுவது கல்விவளர்ச்சியைப்பற்றியாகும். இங்கு ஏராளமான பெண்களும், பெற்றோர்களும் கூடியிருப்பதால் கல்விவளர்ச்சி என்பதுபற்றிப்பேசுவதில் நல்ல பயன் உண்டு என எண்ணுகிறேன். இந்த வாசகசாலை சார்பில் நடைபெற்றுவரும் சரஸ்வதி வித்தியாசாலை மிகுந்த பிரயோசனத்தை உண்டுபண்ணியிருக்கிறதென்பது யாவருமறிந்ததாகும். செட்டிமார் நாட்டில் கல்வி வளர்ச்சிக்காக பாடுபட்ட ஊர்களில் சிராவயலும் ஒன்றாகும். அது தன்னால்கூடிய அளவு சிறப்பாகவே தொண்டாற்றியிருக்கிறது. இப்பொழுதுகுறைவாக பிள்ளைகள் படித்து வருவது வருந்தத்தக்கது. இந்தக் கூட்டத்திலிருக்கும் 200, 300 பிள்ளைகளும் இந்த ஊர்பிள்ளைகளாயிருந்தாலும், இந்தப் பள்ளியில் 40, 50 பிள்ளைகள்தான் படிக்கிறார்கள் என்றால் இதற்குநாம் வருந்தாமல் என்ன செய்கிறது. நம் இராமனாதபுரம் ஜில்லா மற்ற ஜில்லாக்களை விட மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருக்கிறது, காரணம் மிக்க ஏழைகளாயுள்ளோர் தங்கள் பிள்ளைகளை வேலை செய்யவிட்டு வருகிறார்கள். மிக்க பணக்காரர் நமக்குத்தான் பணமிருக்கிறதே பையன் படித்து சம்பாதிக்கவேண்டியதில்லை என்று எண்ணுகிறார்கள். மற்றவர்கள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினாலும் சுமார் 10 வயது வரையில் படிப்புவாசனையை சுவாமிக்கு நைவேத்தியம் காட்டுகிறமாதிரி காட்டிவிடுகிறார்கள்.

தற்கால உலகமெங்கும் அருமையான படிப்புகள் கற்பிக்கப்படுகிறது, தொழிற்பயிற்சி ஊட்டப்படுகிறது. நமது நாட்டிலோஒன்றுமில்லை. பெற்றோர்கள் 6 வயதிற்குள் கற்றுவிட வேண்டுமென நினைக்கிறார், 10 வயதில் கல்யாணம், 15 வயதிலே பிள்ளைகுட்டிகள், 20 வயதில் பேரன்பேத்தி வேண்டு மென்கிறார்கள். இவர்கள் போக்கு மிக கண்டிக்கத்தக்கதாகும். மற்ற எந்த நாட்டிலும் இவ்விதமில்லை. நல்ல முறை நீண்டநாள்கற்று தேர்ச்சியடைந்து இன்பமாக வாழ்கிறார்கள். மலையாளம் முதலிய நாட்டிற்குச் சென்று பார்த்தால் அங்கே கல்விவாசனை கமழுகிறதை அறியலாம். பெரிய பெரிய பெண்கள் கூட இன்னும் ஸ்கூலில் வாசித்து வருகிறார்கள். இங்கே செட்டிமார் நாட்டில் 10 வயதுப்பையனுக்குக் கல்யாணம் செய்தவுடனே மாமியார் வீட்டுவிருந்துக்கு புதுச்சட்டை போட்டு கழுத்தில் (ஜரிகை) கெண்டைத்துப்பட்டா போட்டு அழைத்து செல்லுகிறார்கள். ஏறக்குறைய அவனை ஒரு 40 வயது ஆளுக்குச்சமானமாக நடத்துகிறார்கள். அவர் பலகாரம் சாப்பாட்டைச்சாப்பிட்டு வீட்டுக்கு வெளியே வந்து, குடையினாலே கன்றுக்குட்டியைக்குத்தி விரட்டி விளையாடுகிறான். வேறென்னசெய்வான்? விளையாட்டுப்பருவத்தில்விளையாடத்தான் செய்வான் நன்றாகப்படித்துவிட்டு பந்து விளையாடவேண்டிய பருவத்தில் கல்யாணத்தைச் செய்து பலகாரத்தை அடைத்து பிள்ளை பிறக்கச்சொன்னால் இதைவிட அநியாயம் வேறென்ன இருக்கிறது. மேலும் பையன் குள்ளமாயிருந்தால் ஊருக்கு அழைத்துச்செல்லுகிறதென்று ரங்கூன்முதலிய நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுகிறது. அங்கு அழைத்துச்சென்றாவது கல்விகொடுக்கப் பெறுகிறதா எனில் அதுவுமில்லை. அவனைப்பலகாரம்வாங்கிக்கொண்டுவா;' எச்சல்பணிக்கம் தூக்கிக்கொண்டுவா: என்று கூறப்படுகிறது. எப்படிக்கல்வி விருத்தியாகும். காய்ச்சலாய்க்கிடந்தால் கூட கவனிக்கப்பெறுவதில்லை. ஊரிலிருந்து இங்கு திரும்பும்போது மட்டும் புதுச்சட்டைபோட்டு, கெவுடு கழுத்தில்போட்டு மினுமினு, என்று இங்கிருப்பவர்கள் முன்தோன்றுகிறது. அங்கு காய்ச்சலாய்க்கிடக்கும் பொழுது மேல் வீட்டிலிருக்கும் தெண்டாயுதபாணி மாதிரி இவனொரு தெண்டாயுதபாணியாய் மேல் வீட்டில் கிடக்கவேண்டியது தான். சிறு பையன்களை இங்கேயே வட்டித்தொழில் ஸ்கூல் ஏற்படுத்தி நல்லமுறையில் பயிற்றுவித்தால் வராதா. 8 வயதில் எண்சுவடி படிக்கும் பொழுது யாராவது மாப்பிள்ளை பார்க்கவருகிறது. உடனே படிப்பைமுடித்து கல்யாணம்செய்வது, பிறகு ஊருக்கு அழைத்துச்செல்வது, திரும்பி ஊர் வந்துபிள்ளை பிறக்காவிடில் ராமேஸ்வரம்போய் பிள்ளைபிறக்க வைப்பது, பிள்ளைபிறந்தவுடன் புதுமைசெய்து திரும்பவும் பையனை ஊருக்குத்தள்ளிவிடுகிறது. ஆக இம்மாதிரிவேலை

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

# எட்டுச்சர்க்கரை இனிக்குமா?

## பண்டைப்பெருமையால் பயனென்ன?

(தோழர் அ. இரத்தினசபாபதி)

தாளில் "சர்க்கரை" என எழுதி நக்கினால் அது இனிக்கும் என எந்த முட்டாள் கூறுவான்?—[ஒருவனும் கூற மாட்டான்] அப்படி யாரேனும் கூறுவார்களானால், உடனே அவனைப் பிடித்து பைத்தியக்கார ஆஸ்பத்திரிக் கனுப்புவதைத் தவிர, அவன் கூறியதில் எவ்வளவு தூரம் உண்மையிருக்கிறதுஎன ஆலோசிப்பதில் ஏதேனும் அர்த்தமுண்டோ? ஏனெனில் விஷயம் பிரத்தியட்சமா யிருக்கிறது.

இன்று சுயமரியாதை இயக்கத்தார் நாட்டில் செய்து வரும் வேலை என்னவென்பதைப் பலரும் அறிவர். மனிதனது அறிவு எப்பொழுதும் வளர்ந்து கொண்டே செல்லும் தன்மையுடையது. எனவே அதன் பிரகாரமாக, அறிவுக் கிடந்தந்து மேலை நாட்டினர், அதியாச்சரியமான பற்பல காரியங்களைச் செய்து, அதன் பயனாய் இன்பமும், புகழும் பெறுகின்றனர். மேலை நாடுகளான பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாடுகளே யன்றி கீழ் நாடுகளான, சைனா, ஜப்பான், ஆகியவைகளுங்கூட, தமது ஆராய்ச்சி அறிவின் பயனாய் கைத்தொழிற் சாதனங்களை பெருக்கியும், புதிய புதிய விஷயங்களைக் கண்டு பிடித்தும் உலகுக்கு வெளிப்படுத்தி வருவதைப் பத்திரிகை படிப்போர் யாவரும் அறிவர்.

### மேலை நாட்டில்.

ஒரு மேதாவி புகை வண்டியைக் கண்டு பிடித்தார். மற்றொரு அறிஞர் புகைப்படம் எடுப்பதைக் கண்டு பிடித்தார். வேறொருவர் டெலிபோன் தந்தி, கம்பியில்லாத தந்தி, கிராமபோன், மின்சாரம் முதலியவற்றைக் கண்டு பிடித்தார். இன்னொரு அறிவாளி ஆகாயத்தில் பறக்கத் தக்க ஆகாய விமானங்களையும், சமுத்திரத்தினுள் மூழ்கிச் செல்லத் தக்க "சப்மரீன்" என்னும் நீர் மூழ்கிக் கப்பலையும் கண்டு பிடித்தார். வேறுசிலர் ஆகாய விமானத்தின் மூலம் சந்திர மண்டலத்தை யடையலாமா? செவ்வாய் கிரகத்தில் என்னென்ன இருக்கின்றன; இங்கிருந்து இந்தக் கிரகங்களுக்கு கம்பியில்லாத் தந்தி மூலம் செய்தியனுப்பி, பதிலறியலாமா என்பவை போன்ற அரிய காரியங்களில் தம் அறிவைச் செலுத்தி வருகின்றனர். ஒருவர் ஆகாய விமானத்தில் மணிக்கு 200 மைல் வேகத்தில் பறந்தாரென்றால், அடுத்தவர் 300 மைல் பறப்பேனென்று முனைகிறார். ஒருவர் வானத்தில் 10 மைல் தூரம் உயரத்தில் பறந்து சென்று பெரும் புகழ் பெற்றாரென்றால், இன்னொருவர் நான் பத்திற்கும் மேல் இன்னும் ஏழு (17) மைல்கள் உயரத்தில் பறப்பேனென மார்தட்டி அதற்காவன செய்கிறார். டாக்டர்களோ! தங்கள் தொழிலில் நாளுக்கு நாள் தீவிரமாக முன்னேறிக் கொண்டு வருகின்றனர். குரங்கின் தசையை எடுத்து மனிதனின் தேகத்தில் பொருத்தி விட்டால் இன்னும் 10 வருஷம் இளமையோடிருக்கலாமென ஒரு அமெரிக்க டாக்டர் கண்டு பிடித்திருக்கிறார். ஒரு டாக்டர் ஓர் கோழியின் ஹிருதயத்தை மாத்திரம் எடுத்துத் திராவகத்தில் போட்டு வைத்து அது உயிரோடிருக்கிறதைக் கண்டு, மனிதனும் ஏன் சாகாமல் உயிருடனிருக்கக் கூடாது என்று ஆராய்கிறார்! வேறொரு டாக்டர் ஏறக்குறையப் பிணமாய்ப் போன மனிதர்களையும் உயிருண்டாக்கி விடத் தக்க புதிய யந்திர மொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார். "மனிதனை மனிதன் ஏன் உண்டாக்கி விடக்கூடாது.?" என்ற ப்ரச்னையை எழுப்பி எழுப்பி அதன் மேல் இரவு பகலாய் பெரும் பாடுபட்டு ஆராய்கிறார், இன்னொரு டாக்டர். இன்னும் காற்றிலிருந்து ஆடையுண்டாக்கலாமா, நெருப்பில்லாமல் சமைக்கலாமா, என்று வேறு சிலர் யோசிக்கின்றனர். ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் ஆக்கும் வரையிலும் அவர்களின் ஆராய்ச்சி சென்று வெற்றியடைந்து கொண்டு வருகிறது. ஆனால்,

### கீழை நாட்டில்

சைனா, ஜப்பான், தேசத்தினர் பல வகைகளில் முற்போக்கடைந்திருக்கின்றனர். கீழை நாடுகளின் நாயகமாய் விளங்கும் பெரிய தேசமாகிய நம் இந்தியாவோ? அந்தோ! இதன் நிலைமையை எவ்விதம் விவரிப்பதென்பது நமக்கு நன்கு புலனாகவில்லை.

35 கோடி ஜனத் தொகையுள்ள இப்பரந்த தேசத்தில் ஹிந்துக்கள், முகமதியர்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், ஜைனர்கள், சீக்கியர்கள், ஆதிதிராவிடர்கள், முதலிய பல பெரும் பிரிவுள்ள மக்கள் வசிக்கின்றனர். இப்பிரிவுகளுக்குள்ளும் ஆயிரக்கணக்கான உட்பிரிவுகளிருக்கின்றன. இங்குள்ள மதங்களில் பெருந்தொகையினரைக்கொண்டது "ஹிந்து மதம்'; இந்த 'ஹிந்துக்கள்' என் போரில் பெரும்பாலார் படிப்பறியாதவர்கள், ஒரு சிலரேகற்றவர்கள், எனவே இந்தப்படிப்புள்ள ஒரு சிலராவது உலக நடவடிக்கைகளை அறிந்து "காலத்திற்கேற்ற கோலம்" என்றபடி இயற்கையோடிசைந்து பகுத்தறிவுகொண்டு பிற நாட்டினரைப்பார்த்தேனும் முன்னேற முயற்சிக்கிறார்களா என்றால் அதுவுமில்லை. நாட்டின் நிலைமையோ வர வர தரித்திரத்தில் தலை சிறந்ததாகிக் கொண்டு வருகிறது. எங்கு நோக்கினும் பசி, பசி, என்னும் கூக்குரல் காதைப்பிய்த்துக்கொண்டு போகிறது. ஹிந்து முஸ்லீம் சச்சரவு பெருத்த உயிர்ச்சேதத்தையும் பொருட்சேதத்தையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏழைமக்கள் ஒருவேளைக்கஞ்சிக்கும், ஒரு முழத்துணிக்கும் வகையற்று "என்ன செய்வோம்" என ஏங்கித்தவித்துக் கண்ணீர்விட்டுக் கதறுகின்றனர். லக்ஷக்கணக்கான ரூபாய்களை பாங்கிகளிலும், வியாபாரத்துறைகளிலும், இரும்புப்பெட்டிகளிலும் போட்டு வைத்து மூன்றடுக்கு மெத்தை வீட்டில் முப்பது வேலைக்காரர்களுடன் இரண்டுவேளை பரமான்னம், இருவேளை காபி, பலகாரம், இடையிடையே பழவகைகள் குடிவகைகள் முதலியவற்றுடனும், விதவிதமான மோட்டார்களுடனும் ஆடம்பரமான அணிபணிகளுடனும், இருமாந்திருக்கிற பணக்காரனோ, முதலாளியோ, இந்த பரிதாபகரம் நிறைந்த ஏழைமக்களின் இரத்தக் கண்ணீரைக்கவனிப்பதில்லை.

இன்னும் என்னென்ன வகைகளில் ஏழைமக்களைக்கசக்கிப் பிழிந்தாலும் வேலை வாங்கிப் பணம் சேர்க்கலாம் என வழி கண்டு பிடிக்கிறான் முதலாளி. எந்தெந்த வழிகளில் மக்களின் மூளையை "மாளவியா" வாக (களிமண்ணாக) ஆக்கிப் பணம்பறித்துப் பாழும் வயிற்றை நிறப்பலாமெனப்பார்த்து அதற்காக வழிகண்டுபிடிக்கிறான் பார்ப்பான். "ஜே" சத்தம் பலமாகப்போட்டு "காங்கிரஸ்" "தேசபக்தன்" "தேசாபிமானிகள்" "தியாகிகள்" "வீரர்கள், தீரர்கள், சூரர்கள்" என்று கூச்சலிட்டு அதன் மூலம் பதவியும், செல்வமும், சம்பாதிக்க வழிகண்டுபிடிக்கிறான் தேசியவாதி! பண்டிதர் முதல் பாமரர் ஈறாகஉள்ள அனைவரது உள்ளமும் அரசியல், சமூகவியல், ஆகியவற்றின் ஈடுபட்டுத்தத்தளித்து அமைதியின்றித்தடுமாறி நிற்கையில் சாவதானமாகக் "கம்பர் கவி இன்பத்தைஆராய்ந்து அதன் ருசியின் மகிழ்வு காண்கிறார் ஒரு பி. ஏ., பி. எல்., பெரிய படிப்புப்படித்து "நோபல்பரிசு"ம் வாங்கி பல்லோராலும் சட்ட நிபுணனெனக் கொண்டாடப்படும் "கடவுள் எங்கேயிருக்கிறார்" என ஆராய்வதிலும், "சைவ சித்தாந்தத்தில் மயங்கிச்சித்தாந்தப்பெருமை பேசிப்பொழுது போக்குவதிலும் வழி கண்டுபிடித்திருக்கிறார் ஒரு எம். ஏ., எம். எல்.,!

அடுத்த ஓட்டல்காரன், நல்ல கசப்பான காபி செய்து விற்று அதனால் பெரும் பணம் சம்பாதிக்கிறானென்றால், காபித்தூளில் சீயக்காய்த்தூளைக்கலந்து கசப்புக்காட்ட முயற்சிக்கிறான் பக்கத்து ஓட்டல்காரன். மேல்நாட்டினரின் அபார முற்போக்கை எடுத்துக்காட்டி நாம் மண்ணாந்தைகள் போல் இருக்கிறோமே எனச்சுயமரியாதை இயக்கத்தான் கூறினால், "இதென்ன பிரமாதம்" நமது முன்னோர்கள் கண்டு பிடிக்காத அதிசயத்தையா இப்போது கண்டுபிடித்து விட்டான் வெள்ளைக்காரன்? எல்லாம் நமது பழையபுராணங்களிலும், காவியங்களிலும் முன்னமேயே எழுதிவைத்திருக்கிறது. இங்கிருந்து சாஸ்திரங்களை எல்லாம் திருடிக்கொண்டு போய்த்தானே இதெல்லாம் செய்கிறான் வெள்ளைக்காரன்" எனப் பண்டைப்பெருமை பேசி ஏமாற்றி விட வழிகண்டு பிடிக்கிறார்கள் வைதீகர்கள். இங்குதானிருக்கிறது நமது வாதம்!

வெள்ளைக்காரன் விமானத்தில் பறக்கிறானேயென்றால் "இராவணேஸ்வரனிடம் புஷ்பகவிமானம் இருந்தது அது நினைத்த நினைத்த நேரத்தில் நினைத்த நினைத்த இடத்திற்குப்பறந்து செல்லும்" என்னும் பதில் வைதீகர்களிடமிருந்து நமக்குக்கிடைக்கிறது. மேலும் "ககன குளிகை என்று ஒன்றிருந்தது; அதை வாயில் போட்டுக்கொண்டால் அப்படியே பறக்கலா" மென்கிறார்கள். இந்தப்பெருமை இருப்பது ஏட்டிலல்லவா? இன்று நடைமுறையில் வெள்ளையன் பறக்கையில் நீ என்ன செய்கிறாய்? உனது ஏட்டுவித்தையின் மகிமை என்ன செய்துகொண்டிருக்கிறது? என்பது தான் நமது கேள்வி. நடைமுறையில் வைதீகர்களின் அந்தக்காலத்துக் "ககன குளிகை" இந்தக்காலத்தில் "கஞ்சா உருண்டை" யாகத்தான் இருக்கிறதேயன்றி வேறென்னவாயிருக்கிறதென்று கேட்கிறோம்.

"ஹிப்னாடிசம், மெஸ்மெரிஸம் முதலிய வித்தைகளால் பிறமனிதனின் மனதிலிருப்பதை அறிந்து கூறுகிறான் அமெரிக்கன். இங்கிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருப்பவர்களுடன்பேசுகிறான்' என்று நாம் கூறினால், "இதுவும் புதிதில்லை! ஞானதிருஷ்டியின்மூலம் எங்கள் முன்னோர்கள் இந்தவித்தைகளையெல்லாம் நன்றாகச்செய்வார்கள் இந்த வரலாறு எங்கள் ஏட்டிலிருக்கிறது" என்ற பதில் வைதீகர்களிடமிருந்து கிளம்புகிறது!

நவீன டாக்டர்களின் வைத்திய நுட்பத்தைக்கூறினால், "இதெல்லாம்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# இந்தியர்களின் ஆயுள்விருத்திக்கு இடையூறாக உள்ளவைகள் கோயில், குளங்களும், குருட்டு நம்பிக்கைகளுமேயாகும்.

(எஸ். எஸ். ஆனந்தம்)

உலகத்திலுள்ள எல்லாப்பிறவிகளிலும் சிறந்தது மானிடப் பிறவி. மானிடர்களுடைய உடம்பானது மிக்க விலையுயர்ந்த பொருளென மதிக்கப்படுகிறது. இவ்வுடம்பிற்கு பிணி, துன்பம், சாவு முதலியன நேருகின்றன. நம் உடம்புதான் நமக்குப் மூலபொருளாதலால், அதைப்பற்றி சிரத்தை கொள்வது நமது முக்கிய கடமையாகும். நமது உடல் அழிவுற்றால் உயிர் நீங்குமென்பது தெரிந்த விஷயம். பொருட் செல்வம், கல்விச் செல்வம் முதலிய செல்வங்கள் இருந்தாலும் நம் உடம்பு சுகமாக இராவிட்டால் பயனென்ன? பெரிய மாளிகைகள் கட்டுவதற்கும், கோயில்கள் கட்டுவதற்கும், கோயில், குளம் கண்டவிடமெல்லாம் யாத்திரை செய்வதற்கும், நாடகங்கள் பார்ப்பதற்கும், நம் மக்கள் செலவு செய்யும் பணத்தில் நூற்றில் ஒரு பங்கு தம் தேகத்திற்கென்று செலவழிக்கிறார்களா? இல்லை. நமக்கு தேக பலம் குறைந்த போதிலும் சரி, அல்லது வியாதி உண்டான போதிலும் சரி. உடனே அதற்காகவேண்டிய சிகிச்சைகளை யாராவது தேடுகிறோமா? வியாதி முற்றினதும் தான் சிறிது கவனிக்கத்தொடங்குகிறோம். எல்லாம் "தெய்வச்செயல்" என்றும் "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்றும் சொல்லிக்கொண்டு, தங்கள் முயற்சியை விட்டு ஆயுள் விருத்திக்கு இடைஞ்சலைத் தேடுகிறார்கள். தங்கள் முயற்சியல்லாது தெய்வ முயற்சியால் என்ன ஆகும் என்பதை அறியார்கள் போலும். தங்களது முயற்சியினால் ஏதாவது நன்மை அடைந்தாலும், அந்நன்மையையும் தெய்வத்தால் ஆனது என்று கூச்சலிடுகிறார்கள்.

"நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வ"மாகையால் இதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டியது முக்கியமானதாகும். செல்வ விருத்திக்காக நம்மவர்கள் படும்பாடு சொல்ல இயலாது. மெய் வருத்தத்தையும் கவனிக்கமாட்டார்கள். நித்திரை செய்யவும் மாட்டார்கள். நோயற்ற வாழ்விற்கு அவ்வளவு ஊக்கம் கொள்ளுகிறார்களோ? இல்லை. ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்வோர்கள் தங்களுடைய பசி, களைப்பு முதலியவைகளை சற்றும் கவனிக்கமாட்டார்கள். அன்னவர்கள் தங்கள் தேக வளர்ச்சியையும் பொருட்படுத்தாது ஸ்தல யாத்திரையில் அவ்வளவு அபிமானம் வைத்திருக்கிறார்கள். இது என்ன அறியாமை பாருங்கள். ஒவ்வொரு ஸ்தலத்தின் மகிமையை புராணங்களாகத் தொகுத்து அவைகளுக்கு "ஸ்தல புராணங்கள்" என்று பெயரிட்டு அவைகளை நம் ஜனங்கள் படித்து அதன்படி நடக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் எதற்கு? ஒரு சாராரின் வயிற்றுப்பிழைப்பிற்கல்லாது வேறெதற்குமில்லை. இத்தல யாத்திரைகள் செய்வதில் நம் மக்கள் விரயமாக்கும் பொருள் கொஞ்சமல்ல. இதன் மூலம் மோட்டார் வண்டிக்காரர்களும், ரயில்வே கம்பெனிகாரர்களும், காபி கிளப்காரர்களும் பிழைக்கிறார்கள். ஆனால் யாத்ரீகர்களான நம் மாந்தர்கள் அடையும் பலனென்னவென்றால், பொருள் நஷ்டமும்வியாதிகளும் தான். முக்கியமாக கோயில்கள் குளங்கள் உள்ள பெரிய தலங்களில் தான் தொத்து வியாதிகள் வந்து பீடித்தாலும் தலயாத்திரைகளில் செலவழிக்கும் பணத்தைப் போல் சில விடுகிறார்களா? அதுவும் இல்லை. எவ்வளவோ கஷ்டப்பட்டு வியாதியை சௌக்கியப்படுத்தும் வைத்தியர்களுக்குத் தகுந்த கூலியைக் கொடுப்பதற்கு முன்னும் பின்னும் பார்க்கிறார்கள். இவ்வாறு பல வழிகளிலும் மனிதர்கள் உடம்பை உழைக்கச் செய்து பலத்தைக் குறைத்துக் கொள்ளுகிறார்கள். இப்படி இல்லாது அவரவர்களுடைய தேகச்செழிப்பும், அழகும், பலமும், நீடித்த ஆயுளும் பெறுவதற்கான வழியைக் காட்டும் கல்வியைக் கற்பதே சிறந்ததான கல்வியேயல்லாது, சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் தேர்ச்சி அடைந்து அதன்படி நடந்து வாழ்நாளை வீணாக்கும் கல்வி, கல்வியல்லவென்பதை யாரும் மறுக்க முடியாதென நம்புகிறேன்.

மற்ற நாட்டார்களின் தேக பலத்தையும், நோயற்ற வாழ்வையும், ஆயுள்விருத்தியையும் கவனித்துப் பார்த்தால் உண்மை விளங்காமல் போகாது. மேல் நாட்டார்கள் ஆயுள் வலிமை அடைவதையே முதல் தொழிலாகவும், கல்வியாகவும் பாராட்டுகிறார்கள். இதனால் தான் அவர்களுக்கு ஆயுள் விருத்தியும் தேக பலமும் எளிதில் உண்டாகிறது. இன்னும் நம்மைப் போல் அவர்கள் கண்மூடித்தனமான நம்பிக்கைகளில் ஈடுபடுவதுமில்லை. சென்ற வருஷத்தில் எடுக்கப்பட்ட ஜனகணிக்கில் இந்திய மக்களுக்கு சராசரி வயது இருபத்திரண்டு (22) என்று தெரிகிறது. மேல் நாடுகளின் சராசரி வயதைக் கவனித்தால் ஐம்பதுக்குக் குறைந்து ஒன்றும் இல்லை. "எல்லாம் விதிப்பயன்படி நடக்கும்" என்ற நம்பிக்கை நம்மவர்கள் கையாண்டு வருவதாலும், முயற்சியின்மையாலும், வறுமை நோயினாலும் தான் அவரவர்கள் ஆயுள் குறைவுபடுகிறது. மற்ற நாட்டார்களுக்கும் இயற்கையாய் ஆயுள் அதிகப்பட்டுவிடவில்லை. அவர்கள் கையாளும் சாதனங்களினாலும், உழைப்பினாலுமே அதிக வயதை அடைந்திருக்கிறார்கள். மேல் நாடுகளில் நூறு வயதிற்கு மேல்பட்டு நல்ல உழைக்கக்கூடிய நிலைமையில் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அமெரிக்காவில் நூறு வயதிற்கு மேற்பட்டவர்களின் சங்கம் ஒன்றும் இருக்கிறது. அதில் நூறு வயதிற்கு மேற்பட்டவர்கள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தெய்வத்தையே நம்பிக்கொண்டிருப்பதினாலேயா நூறு வயதிற்கு மேல் உயிர் வாழ்கின்றார்கள்? இல்லை. "சுவற்றை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுதவேண்டும்" என்ற பழமொழியை மேல் நாட்டார்கள் கைக்கொண்டு தேக வலிமைக்கான நன்மையை நாடுகிறார்கள். நம்மவர்கள் கைக்கொண்டு தேகவலிமைக்கான நன்மையை நாடுகிறார்கள். நம்மவர்களைப் போல் தெய்வத்தைநம்பி சோம்பேறிகளாய்த் திரியமாட்டார்கள் என்பது உண்மை.

உடல் நலம் பெற்று ஆயுள் வலிமை அடைவதற்கு நல்ல தண்ணீரும், நல்ல காற்றும் முக்கியமான சாதனங்களாகும். கோயில், குளங்களுக்குத் திருவிழாக்கள் பொருட்டு செல்லும் ஜனங்கள், அங்கு நல்ல தண்ணீரையும், காற்றையும் கவனிப்பதில்லை. கண்டவிடமெல்லாம், நினைத்த தண்ணீரெல்லாம் குடித்து பல நோய்களுக்கு இடத்தைத்தேடி வைக்கிறார்கள். பின்னும் இரவு நேரங்களில் நித்திரை செய்யக்கூடிய இடங்களைப்பற்றி சொல்லவேண்டியதில்லை. நாலாபக்கங்களிலும் மலஜலங்கள் கழித்திருக்கும். அதன் மத்தியில் படுத்து உறங்குவார்கள். ஆதலால் திருவிழா பார்க்கச்செல்கிற நம் ஜனங்கள் எப்பேர்ப்பட்ட காற்றை உட்கொள்ளுகிறார்கள் என்றும், அதன் மூலம் என்னென்ன பலன்களை அடைகிறார்கள் என்றும் வாசகர்களுக்கே நன்கு விளங்கும். இவ்வகையில் பல நோய்களுக்கு ஆளாகி கடைசியில் உயிருக்கும் தேசத்தை உண்டு பண்ணிக்கொள்கிறார்கள். ஒரு மனிதனுக்கு நல்ல தண்ணீரும், நல்ல காற்றும் இல்லாவிட்டால் அதனால் வரும் கேடுகள் பல என்பதை இன்னொருதரம் வற்புறுத்திக்கூறுகிறேன். எவ்வளவு திருவிழாக்களுக்கு சென்றாலும் திருவிழாக்களில் செலுத்தும் கவனத்தில் சிறிதளவேனும் உடல் நலத்தைப்பற்றி கவனிக்கவேண்டியது அவசியம். அப்படிக்கில்லாதிருந்தால் நம்முடைய ஆயுள், விருத்தி அடைவதென்பது இயலாதகாரியம்.

கடைசியாக நான் உரைப்பது என்னவென்றால் மூடத்தனமான நம்பிக்கைகளில் தலையிட்டு வைதீகக் குடுக்கைகளின் பேச்சைக்கேட்டு புராணங்களையும், சாஸ்திரங்களையும் நம்பி அதன் மூலமாக கோயில்,குளம் கண்ட விடமெல்லாம் யாத்திரை செய்து பொருளை வீணாக விரயஞ் செய்து உடல் நலத்தைக்கவனியாது வாழ்நாளை வீணாக்காமல் இருக்க வேண்டியது ஒவ்வொருவருடைய முக்கிய கடமையாகும் என்பதே.

---

## உரிமையை நிலை நாட்டியவீரச் சிறுமி.

### மணமகன் பிடிக்காததால் விவாகத்திற்குத் தடை.

இம்மாதம் 11 தேதி நாகப்பட்டணத்தைச்சேர்ந்த பூத்தூர் என்னும் கிராமத்தில் ஓர் நூதன சம்பவம் நடைபெற்றதாக பத்திரிகைசெய்தி கூறுகிறது, அதாவது ஷை கிராமம் கிருஷ்ணய்யர் என்பவர் தனது இளங்குமாரியை கும்பகோணத்தைச் சேர்ந்த சுப்ரமணியன் என்ற ஒருவருக்கு விவாகம் செய்து கொடுப்பதாய் உறுதி கூறிவிவாகத்திற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் முற்றுப் பெற்றிருந்தன. அதுசமயம் அப்பெண்ணின் தாய்மாமன் அங்கு வந்ததாகவும் அவரிடத்தில் அப்பெண் பிரஸ்தாபமணமகனை ஏற்றுக்கொள்ளத்தனக்கு கொஞ்சமும் பிரியம் இல்லையென்றும், தன் தந்தையின் கட்டாயத்தில் காரியங்கள் நடைபெறுவதாகவும், தான் அவரையே (தாய்மாமனையே) விவாகம் செய்து கொள்ள முழுமனதுள்ள வளாயிருப்பதாகவும் தெரிவித்த தோடு, தாய்மாமனுடன் தஞ்சைக்கு உடனே புறப்பட்டுப்போய் விட்டாள். விவாகத்திற்கு வந்திருந்த பந்துக்கள் தத்தம் வீடுபோய்ச் சேர்ந்தனராம்.

---

## சாரதாசட்ட அமுல்.

### வக்கீலுக்கு அபராதம்.

சிதம்பரம் வக்கீல் ராமசாமி அய்யர் என்பவர் சாரதாசட்டத்தை மீறி பெண்ணுக்கு கலியாணம் செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் ஷை வக்கீலுக்கு ஜில்லாகலெக்டர் அபராதம் விதித்தார்.

# இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகா நாடு.

## மகாநாட்டுத்தலைவர் புதுவை தோழர் ஏ. வி. முத்தையா சொற்பொழிவு.



தோழர் ஏ. வி. முத்தையா பி. ஏ. பி. எல். அவர்கள்.

17-7-32ந் தேதி நடைபெற்ற இராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் தலைவர் புதுவை அரசாங்க வரவு செலவு இலாக்கா உபதலைவர் தோழர் ஏ. வி. முத்தையா பி.ஏ. பி.எல். அவர்கள் நிகழ்த்திய தலைமைப்பேருரை வருமாறு,—

உயர்குணப் பெரியோர்களே !
உயிர் உரிமை நேயர்களே !!
அருமைச் சகோதரிகளே,
சகோதரர்களே !!!

இம்மகாநாட்டைச் சிறப்பிப்பதற்கும் சீர்பெற நடத்துவதற்கும் இங்கு குழுமியுள்ள தங்களனைவருக்கும் எனது மனமார்ந்த வணக்கம்.

இந்த இயக்கம் தொடங்கிய நாள் முதல் உடனிருந்து தொண்டு புரிந்து வருபவர்கள் தங்களிலனேகர். யானோ இடையிடையே அப்போதைக்கப்போது தங்களுடன் சேருகின்றேனேயன்றி, தங்கள் அரும் பெரும் தொண்டிலேயே ஈடுபட்டு எப்போதும் உழைத்து வருபவனல்ல. எனவே, இயக்கத்தின் போக்கில் பல நிகழ்ச்சிகள் உண்டாயிருப்பதின் உட்காரணங்கள் எனக்குத் தெரிய வழியில்லை.

அப்படித் தெரிந்து கொள்ள வழியொன்றை ஏற்படுத்திக் கொள்ளவோ போதிய அவகாசமில்லை.—

பெரிய இயக்கங்கள் எவையானாலும், அவைகள் நன்கு நடைபெற்று கொண்ட கருத்துகள் நிறைவேறிவருவதற்கு அவைகளின் நோக்கங்கள், அன்பு,அறிவு என்னும் அடிப்படையுள்ள ஆற்றலிருந்தால் தான்,எண்ணங்களோடும் பேச்சுக்களோடுமிராமல் செய்கைகளிலும் பூர்த்தியாகும். இதைப் பற்றி பின்னர் சில வார்த்தைகள் சொல்லி முடிக்கிறேன்.

இப்போது சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம் பரந்தது, விரிந்தது, ஆழ்ந்தது, என்பதாகத்தங்கள் முன் யான் கடைவிரிக்க வேண்டியதில்லை.

ஆனால் அந்த நோக்கம் ஏன் உண்டானது ? என்று பார்த்தால் இங்கே இது என் சொந்த அபிப்பிராயம்- ஏழை மக்கள், வறிய மக்கள், அறியாமையிலழுந்தி, உண்மை விளங்காது, பல பல துறைகளிலும், இன்னல்களுக்குட்பட்டுத் தவிக்கின்றார்கள். இது ஒரு காட்சி! இப்படித் தவிக்கும் ஏழை மக்களுக்கு, வறிய சகோதரர்களுககு, கண்களைத்திறந்து விடாமல், புத்தியைத் துலக்காமல், வழிகளைக் காட்டாமல், வேறு சில சகோதரர்கள் அவர்களை மிரட்டி, அதட்டி, பயப்படுத்தி எய்த்து பொருள் பறிக்கின்றார்கள். இது மற்றொரு காட்சி !

இவ்விரண்டு காட்சிகளையும் கண்டு மனம் பொறாது, உள்ள முடைந்து, இவைகளை யகற்ற வழி தேட, இச்சீர்கேடான நிலையை சீர்படுத்த, அருள் நோக்கங் கொண்ட அறிவிற் சிறந்த பெரியார்கள் இவ்வியக்கத்தை ஆரம்பித்திருக்க வேண்டும், ஆரம்பித்தார்கள்.

அன்பு அறிவுடைய எவரும் இத்தக் காட்சிகளைக் கண்டால்-இந்த நிலையைப் பார்த்தால், அதைப்பற்றி கேள்விப் பட்டால் சும்மாயிரார். எப்படி இருக்க முடியும்?

மனம் பதைத்து அந்தோ ! அறியாமையின் விபரீதங்கள் தான் எவ்வளவு கொடியன ! இப்பேர் கொத்த அநியாயங்களும், அக்கிரமங்களும் உண்டா ? இவைகளை யகற்றுவதற்கு வழியொன்றும் கிடையாதோ? வென ஆழ்ந்து யோசிக்காமலிரார்.

இந்த யோசனை உதித்த ஒருவருக்கு ஆற்றலுமிருந்தால், இயக்கமொன்றில் முற்பட்டு, தொண்டு செய்யாமலிரார்.

தன்னைப்போன்ற உயிர்கள்இன்னலுற்று வாடி, வதங்கி-ஏங்கி நிற்கும் போது கன்னெஞ்சம் படைத்தவனாய், சாத்திரங்கள் காட்டி உதவி செய்ய முன் வராமல், வாதம் புரிபவனும், மனிதனோமோ ? சொல்லுங்கள்.

நோக்கங்கள் நல்லவைகளாகவிருக்கலாம்-ஆற்றலிருந்தால் ஒருவர் அவைகளை நிறை வேற்றியும் விடலாம். நிறைவேற்றி விட்டதாகப் பறைசாற்றி விடலாம்.

ஆனால் உண்மையில் நீடித்த பலனை உண்டு பண்ணுவதற்கு, இயக்கத்தால் கையாளப்படும் வழிதுறைகளிலும் சில முறைகள் வேண்டுமென்றும், சில கட்டுப்பாடுகளிருக்க வேண்டுமென்றும், உலகியலில் பண்பட்ட தங்களுக்கு யான் சொல்லுவது மிகையாகும்.

இயக்க அமைப்பு முறைகளில், இயக்க வேலைத்துறைகளில் பேதங்களிருக்கலாம்;பேதங்களிருக்கும், நோக்க ஒருமையிருப்பின், வழிதுறைகளின் வேற்றுமைக்காக ஏன் பிணக்கு இருக்கவேண்டும்?

கடவுளை வழிபடு! அன்பே தெய்வம்! என்பதாக பொதுவில் பெருங் கூச்சல் போட்டுக்கொண்டு தனிமையில் தணிந்த குரலாக என்சாமிதான் பெரியசாமி! அவன் சாமி சின்ன சாமி! என்றும், எங்கள் சமயந்தான் உண்மை சமயம், அவர்கள் சமயங்களெல்லாம் குருட்டுச் சமயங்கள் என்பதாகவும் மதப்பித்தர்கள் பிதற்றட்டும்.

உண்மையை மிளிரச்செய்ய,அறிவு அன்பென்னும் விளக்கை பலரும் பார்க்க, உயர்த்திப்பிடித்துக் காட்டிக் கொண்டு நடக்கவேண்டிய இவ்வியக்கத்திலும், அந்த முன்சொன்ன விபரீதமேன்? நன்றாய் நிதானித்துப் பாருங்கள். நண்பர்களே, பெரியோர்களே, தோழர்களே!

ஒரு இயக்கத்தில் பலபல துறைகள், ஒரு துறையில் பலபல வேலைகள் இருக்கும். எல்லாத் துறைகளிலும் எல்லா வேலைகளையும் ஒருவரே செய்வது சாத்தியமானதல்ல.

நமக்கு உடல் ஒன்றே. ஆனால் அவயவங்கள் பல. எல்லா அவயவங்களும் தங்கள் தங்கள் வேலையை— மற்ற அவயவம் சரியாக வேலை செய்கிறதா இல்லையா வென்பதை நோக்கிக்காலங் கழிக்காது—தங்கள் தங்கள் வேலையைச் சரிவரச்செய்தால் தான், உடல் நல்ல நிலையிலிருக்கும்—என்பது தங்களுக்குத் தெரிந்ததுதானே!

முதலில் குறிப்பிட்டபடி, அன்பும், அறிவும் கலந்தை அடிப்படையுள்ள ஆற்றலே நீண்ட நன்மை பயக்கும். அதாவது மக்களுக்கு நீண்ட காலம் இன்ப மளிக்கக்கூடிய செய்கைகளை, வேலைகளை செய்து முடிக்கும்.

அற்றேல், அறிவை மாத்திரம் அடிப்படையாகவுள்ள ஆற்றல், சக்தி, மன்பதையின் கஷ்டங்களை நன்குணர்ந்து, இரக்கங்குன்ற, மிக கடினமான வழிகளில் புகுந்து, மனித வாழ்க்கைக்குப் பயனற்ற சில வேளைகளில் இன்னலும் விளைவிக்கக்கூடிய செய்கைகளைத் தான் செய்துமுடிக்கும்.

அன்புமாத்திரம் அடிப்படையாகவுள்ள ஆற்றலுமப்படியேதான். மன்பதையின் துன்பங்களை யுணர்ந்தாலும், பகுத்தறிவின் உதவியில்லாததால், விபரீதங்களில் ஈடுபட்டு மக்களை குருட்டு நம்பிக்கைகள் முதலியவற்றில் ஆழ்த்தி இன்னல் விளைவிக்கும்.

ஆகையால் தான், அறிவு, அன்பு, இரண்டும் சமமாய்க் கலந்த அடிப்படை வேண்டுமென்று யான் குறிப்பிடுவது.

அதுபோன்ற அடிப்படை மாத்திரமிருந்தால் போதுமா?

அடிப்படை எப்போதும் கட்டடங்களின் கீழ் மறைந்து நிற்கும் பகுதியல்லவோ? நல்ல அடிப்படைகளிருந்தாலும், மேல் கட்டடங்களின் அமைப்பும், இயக்கத்திற்கு ஒத்ததாகவன்றோ இருக்கவேண்டும்?

மேற்கட்டடங்களின் அமைப்பு நன்றாயிருப்பதற்கு கட்டடம் கட்டுபவர்கள், வேலைக்காரர்கள், தொண்டர்கள், பொது நோக்கு, அறிவு, அன்பு, ஆற்றல், உடையவர்களாக இருக்கவேண்டும்.

இல்லாவிடின் கட்டடம் நன்றாயமைகிறதில்லை. சுவர்கள் சாய்ந்து நிற்கும். வாசற்படிகள் நல்ல காற்றோட்டத்தைத்தடுத்து நிற்கும். பொதுவாகக்கட்டடம் வசதிக்குறைவாக அமைந்து நிற்கும். அதனால் இன்

னல்கள் ஏற்படும். இன்னல்களை விலக்குவதற்கு கட்டிய கட்டடத்தை நேர்மையாக, அழகு படுத்துவதற்கு, பலப்படுத்துவதற்கு என்ன செய்வது?

மேல் கட்டடத்தைத் தகர்த்து வீழ்த்தி, அடிப்படைகளை மாத்திரம் வைத்துக்கொண்டு திரும்பவும் புதியதோர் கட்டடம் துவக்கவேண்டியதுதான். வீண்வேலை? உண்மை. பின் என் செய்வது? கட்டடத்தை அமைக்க முன்வந்த நற்றொண்டர்கள், ஒன்று அறிவு மிகுதியாலும், அன்பு குறைவாலும் அல்லது அறிவு குறைவாலும், அன்பு மிகுதியாலும், உற்சாகங்கொண்டு கோணலாகக்கட்டிவிட்டார்கள். அதனால் கட்டியதை அழித்து திரும்பவும் கட்டவேண்டியதாய் விட்டது.

ஆகையால் நண்பர்களே, சகோதரிகளே, சகோதரர்களே, நல்லதோர் இயக்கத்தில் நாம் ஈடுபட்டுத் தொண்டாற்றும்போது, அடிக்கடி அபிப்பிராய பேதங்கள் ஏற்படும்போது, நம்மையே நாம் பரிசோதித்துக்கொள்ளவேண்டும். நமது வேலையால், நமது தொண்டால், இயக்கத்திற்கு நல்ல நீடித்த பலன் உண்டா? நாம் தொண்டு செய்யும்வகையில் ஏதாவது கோணல் உண்டா? அதாவது உண்மையில் நம்மிடமே குற்றம் யாதேனும் உண்டா? வென்பதை அடிக்கடி விசாரித்துப் பார்த்து திருத்திக்கொள்ளாவிடில் இப்போதுநாம் எந்தப்பழக்க வழக்கங்களை நீக்க முயற்சிக்கிறோமோ, எந்தப் பகுத்தறிவுக்கொவ்வாத முறைகளைக்கண்டிக்கிறோமோ, அவை போன்ற பழக்க வழக்கங்களும் முறைகளும், நம்மிடமே, நம் வழியாக நம்மியக்கத்திலேயே, தோன்றிவிடும். இது நிச்சயம்.

ஆகையால்தான் நான் சொல்லுவது, நமது பகுத்தறிவின் விளக்கத்தை, நமதுள்ளத்தின் உணர்ச்சியை, நமதாற்றலின் முற்போக்கை குறைக்கக்கூடிய, கெடுக்கக்கூடிய, தடுக்கக்கூடிய பழக்கங்கள், எண்ணங்கள் நம்மிடம் வேண்டாம். அவைகளை முதன்முதல் அகற்றுவோம்.

பகுத்தறிவின் விளக்கத்தை குறைக்கக்கூடிய எண்ணங்கள், வினைகளுண்டு. உள்ளத்தின் உணர்ச்சியை அழிக்கக்கூடிய எண்ணங்கள், வினைகள் உண்டு. ஆற்றலைச்சிறுகவைக்கும் செய்கைகள், எண்ணங்கள், பழக்கங்கள் உண்டு.

இவைகளையெல்லாம் ஐம்பெருங் குற்றங்களென பொதுவாகச் சொல்லுவார்கள்? பெரிதோ, சிறிதோ, ஐந்தோ? எட்டோ? வென்ற வீணுரைகள் வேண்டாம். குற்றங்கள் குற்றங்களே.

குற்றமென்றாலென்ன? அறிவு, அன்பு, ஆற்றல், இவைகளை மயக்கி குறைத்து, அழித்து உடனே அல்லது தாமதமாக மக்களுக்கு இன்னல் விளைவிக்கக்கூடியஎண்ணம் செய்கை, யாவும் குற்றமேயாகும். இது பிரிவினையை யுண்டுபண்ணும் ஒற்றுமையைக் குறைக்கும்.

அறிவை வளர்த்து, அன்பைப் பெருக்கி, ஆற்றலை ஓங்கச் செய்யும், எண்ணம், ஆசை, செய்கை, யாவும் குணமேயாகும். இது பிரிவினையைக் குறைத்து ஒற்றுமையை உண்டு பண்ணும்.

என்ற இந்த விலக்கணங்களைக் கொண்டு நமது எண்ணம், ஆசை, செய்கை, இவைகளை அடிக்கடி சோதித்து நம்மை திருத்திக்கொண்டு பொதுத்தொண்டில் உழைத்தோமானால், நமது இயக்கம் செழித்தோங்கும். மக்கள் துன்பம் நீங்கி இன்புறுவார்கள்.

பொதுவாக நமதியக்கத்தைக் குறைகூறவிடமில்லையெனினும் இதில் ஈடுபட்டுள்ள தொண்டர்கள் சிலரையும் தனிமையில் உலகம் குறைகூறும்படியாக இடந்தரக்கூடாது. தோற்றங்களைக்கண்டு உலகம் மோசம் போகலாம், போகட்டும். நாம் நமது சொந்த கண்முன்பாக குறையற்றவர்களாக இருக்கவேண்டாமா? யோசியுங்கள். எதற்காக? நமதியக்கத்தின் பொது நன்மைக்காக,

சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையாவது அன்பு, அறிவு தோய்ந்ததாக விருப்பதால்தான் அதன் நோக்கம் என் மனதிற்கியைந்ததாக விருப்பதால்தான், உண்மை தேட்டத்திற்கு அறிவு, அன்பு ஆற்றலென்னும் குணங்கள் இன்றியமையாதவைகளாயிருப்பதால்தான் இவ்வியக்கத்தின் மீதுள்ள பற்றுதல் காரணமாக இச்சில வார்த்தைகளை எனது சிற்றறிவிற்கெட்டிய வரையில், என் உள்ளத்தில் பட்டவரையில், என்னாலியன்ற அளவு கொஞ்சம் கூறினேன்.

தாங்கள் யான் சொல்லியவற்றை நன்காராய்ந்து சரியாகத்தோன்றுவதை கொள்ளவும், அல்லாததைத் தள்ளவும் செய்யுங்கள்.

"உண்மையில் மிக்கதோர்
உயர் அறம் இல்லை."

எல்லோருக்கும் என்மனமுவந்த வணக்கம்.

---

## வங்காள முஸ்லீம் மகாநாடு.

### தலைவர் ஏ. ஹெச். கஸ்னவி சொற்பொழிவு.

வங்காள முஸ்லீம் மகாநாடு 9-7-32ல் மாலை கல்கத்தா டவுன் ஹாலில் லண்டன் மகாநாட்டுப் பிரதிநிதியும், இந்திய சட்டசபை அங்கத்தினருமான ஏ. ஹெச். கஸ்னவி அவர்கள் தலைமையில் கூடிற்று தலைவர் பேச எழுந்ததும் சில விஷமிகள் குழப்பம் செய்து பேசவொட்டாது கூச்சலிட்டனர். ஆனால் சிறிது நேரத்தில் அவர்கள் வெளியேற்றப்பட்ட பின் கூட்டம் அமைதியாய் நடைபெற்றது. தலைவர் பேசியதின் சாராம்சம் வருமாறு:—

"பிரிட்டிஷ் மக்கள் வங்காள முஸ்லிம்களுக்கு திருப்தி உண்டுபண்ணத் தக்கவாறும், முன்னேற்றத்திற்கும் அமைதிக்கும் ஏற்றபடியும் வகுப்புப் பிரச்சினையில் முடிவு கூறுவார்களென்று நான் நம்புகின்றேன். சைமன் கமிஷனுக்கு பிறகு, 1931ம் வருஷம் நவம்பர் 12ம் தேதி சிறுபான்மையோர் ஒப்பந்தம் ஏற்பட்டதே முக்கியமான சம்பவமாகும். அந்த ஒப்பந்தம் 13ந் தேதி பிரதம மந்திரியிடம் சமர்ப்பிக்கப் பெற்றது. லட்சுமணபுரி ஒப்பந்தத்தில் வங்காள முஸ்லிம்கள் தங்கள் உரிமைகளை இழக்க வேண்டிய தேற்பட்டது. இனியும் அத்தகைய சம்பவம் நேரிடுமோ வென்றே, வங்காள முஸ்லிம்களுக்கு கவலை ஏற்பட்டுள்ளது. வங்காளத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையோராகையால், சட்டசபையில் பெரும்பான்மையான ஸ்தானங்கள் வேணடும். சட்டசபையில் சிறுபான்மையோராக விளங்கும்படிச் செய்வதோ அல்லது பாதி ஸ்தானங்கள் அளிப்பதோ கூடாது. வங்காளத்தில் இந்துக்களைவிட முஸ்லிம்கள் கொஞ்சமே அதிகப்பட்டிருப்பதால். 'முஸ்லிம்களுக்குத் தனித்தொகுதிமுறை' அனுமதிப்பதால் பாதகமில்லை. சிறுபான்மையோருக்கு, விசேஷ பிரதிநிதித்துவம் அளிக்க ¼ ஸ்தானங்களை மட்டும் விட்டுக் கொடுக்கக் கூடும். தொழிலாளர்கள், பெண்கள் முதலியவர்களுக்கு விசேஷத்தொகுதிகள் ஏற்படுத்துவதை நான் ஆதரிக்கவில்லை. விசேஷ தொகுதிகள் ஏற்பட்டே தீருமானால் அத்தகைய தொகுதிகளின் ஸ்தானங்களிலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் முஸ்லிம்களின் அபிப்பிராயங்களைப் பிரிட்டிஷாருக்கு தெரிவிக்க முஸ்லும் பிரதிநிதி யொருவரை லண்டனுக்கு அனுப்ப வேண்டுவது மிக்க அவசியமாகும். அல்லாவிடின், எதிர் பிரசாரத்தால் இதுவரை மெய் வருந்தியதற்கு பலனில்லாமல் போகும்.

---

## சாரதாசட்டத்தை மீறியகிறிஸ்தவர்கள்.

### வைதீகர்குட்டு வெளிப்பட்டவிபரம்.

### வாதிக்கு மாஜிஸ்திரேட்புகழுரை.

பாசின் தாலூகாவைச்சேர்ந்த இரண்டுகிறிஸ்தவர்கள் மீதும் பாதிரியார் மீதும் 18 வயதுக்கு கீழ்பட்ட மணமகனுக்கு விவாகம்செய்து வைக்கப்பட்ட குற்றத்திற்காக விசாரணை நடத்தப்பட்டது. அதில் முதல் இரண்டு எதிரிகளுக்கும் தலா 200 ரூ. அபராதமும், கட்டத்தவறினால் 8 நாள்சிறைதண்டனையும் விதிக்கப்பட்டது.

மாஜிஸ்திரேட் தீர்ப்புக்கூறுகையில் வாதியாயிருந்து கேசை நடத்திய திரு. பெர்னண்டசை பாராட்டியதோடு சாரதாசட்டத்தை மீறி வைதீகர்கள் செய்யும் சூட்சியைக் கண்டு பிடித்த வாதி புகழத்தக்கவரென்வும், வசூலிக்கப்படும் அபராதத் தொகையில் ரூ 120 வாதியின் பிரயாசைக்கு ஈடாக கொடுக்கப்பட வேண்டுமென்றும் தீர்ப்புக் கூறினார்.

---

## கும்பகோணம் விதவா விவாகம்.

கும்பகோணம் கர்ணக் கொல்லை மேலத்தெரு சாமிநாத பத்தர் குமாரர் 20 வயதுள்ள எஸ். கோவிந்தசாமிக்கும் ஷை தெரு மு. வைத்திலிங்க பத்தரின் சகோதரியினுடைய குமாரத்தியும் சுமார் 14 வயதுடைய பால்ய விதவையுமான கமலாம்பாளுக்கும் 6—7—32-ல் சீர்திருத்த முறைப்படி திருமணம் நடை பெற்றது. ஷை மணமகளுக்கு 13 வயதில் முதல் கல்யாணம் நடை பெற்று புருஷனிறந்துவிட்டார். அதன் பிறகு ஷை கமலாம்பாளுடைய சம்மதத்தின் பேரில் ஷை கர்ணக் கொல்லை மேலத்தெரு கைலாச பத்தர், சட்டய பத்தர், குருசாமித் தேவர், சிங்காரத் தேவர், சக்கிரபாணி பத்தர், அ. கோவிந்தசாமி பத்தர், சி. சிங்காரபத்தர், ஜி. தாயுமான சுவாமி, நடேச படையாச்சி, பெரியநாயக்கத்தம்மாள், மணமகளின் மாமனாகிய மு. வைத்திலிங்க பத்தர் முதலியவர்களின் முயற்சியின் பேரிலும், கும்பகோணம் சுயமரியாதை வாலிபர் சங்கத்தாரின் தூண்டுதலின் பேரிலும் இவ்விவாகம் நடைபெற்றது. திருமணத்திற்கு சுமார் 200 பெயர்கள் வரை விஜயம் செய்திருந்தார்கள். கம்மாளர்கள் என்படும் இக்கும்பகோணத்தில் நடை பெற்ற விதவா விவாகத்தில் இது தான் முதலாவதாகும்.

## "நெப்போலியன்"

கும்பகோணம் சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் ஸ்தாபகர்களிலொருவரும், ஷை சங்கத்தின் முக்கிய அங்கத்தினரும் உண்மைச்சுயமரியாதை வீரருமான தோழர் கே. தங்கவேலு அவர்களினுடைய சுமார் ஒன்னறைவயதுடைய ஆண்குழந்தைக்கு சீர்திருத்த முறையில் பெரிய தேசாபிமானியும் மகாவீரனுமாகிய "நெப்போலியன்" என்னும் பிரான்ஸ்சக்கரவர்த்தியினுடைய பெயரை வைத்து அழைத்துவருவதைக்கேட்டு மகிழ்வடைகிறோம். பெயருக்கேற்ப நடையுடை பாவனைகளிலும் நெப்போலியனைப்போன்ற அக்குழந்தையும் இருப்பதால் அப்பெயர் முற்றிலும் பொருத்தமுடையதாகவேயிருக்கிறது என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

என சுயமரியாதைச்சங்கம் காரியதரிசி தெரிவிக்கிறார்.

# 'கடவுள்' என்பது என்ன?

## சொல் மயக்கம் ஒழிக.

## "கடவுளும், பிரபஞ்சமும்" என்பதை ஆராய்க.

[சாமி: சிதம்பரனார்]

மக்கள் தம் பகுத்தறிவினாலும், திறமையினாலும் இவ்வுலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் அடக்கியாளும் தன்மையைப் பெற்றிருக்கின்றனர். எத்தகைய கொடிய விலங்குகளையும், அளவுகடந்த ஆற்றலுடைய இயற்கைச் சக்திகளையும் அறிஞர்கள் கீழ்ப்படியச் செய்து விடுகின்றனர்.

ஆனால் பேரறிவு வாய்ந்தவர்கள் என்று கருதப்படுகின்றவர்களும், பேராற்றல் வாய்ந்த வீரர்களும் கூடப் பொருளற்ற ஒரு மொழியின் மேல் அறியாமையால் அன்பும், அச்சமும் கொண்டிருக்கின்றனர்.

இம்மொழி "கடவுள்" என்னும் ஒரு சொல்லேயாகும். இச்சொல்லுக்கு எழுத்து வாசனையும், உலக இயல்பும் உணராத அறிவிலிகள் முதல், எல்லாமறிந்த அறிஞர்கள் வரை அனைவரும் பண்டு முதல் இன்றுவரையிலும் அஞ்சுகின்றனர்.

"கடவுள்" என்ற இச்சொல்லுக்கு இலக்கான ஒரு பொருள் உலகில் இருப்பதாகவும், அப்பொருளே உலக நிகழ்ச்சிகளையெல்லாம் நடைபெறச் செய்து வருவதாகவும் கருதி வருகின்றனர். இந்த எண்ணத்தை அடிப்படையாகக்கொண்டு எழுந்தவைதான் இப்பொழுது இவ்வுலகில் காணப்படும் எண்ணற்ற மதங்களும், மத நூல்களும், என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

"கடவுள்" என்ற இச்சொல்லின் மீது மக்கள் கொண்டிருக்கும் மயக்கம் ஒழியுமாயின், உலகமெங்கும் ஒன்றுபட்ட உயர்ந்த இன்பவாழ்வு தோன்றி விடுதல் வெகு எளிதாகும்; ஒருவரோடு ஒருவர் கலாம் விளைக்கக்காரணமாக இருக்கும் வகுப்புப்பிரிவினைகளும், மதப்பிரிவினைகளும், பழக்க வழக்க வேறுபாடும், மறைந்து மாண்டொழியும்; மக்களின் உழைப்பால் வரும் செல்வத்தைப் பாழ்படுத்திக்கொண்டிருக்கும், பல வேறுபட்ட கோயில்களும், தெய்வங்களும், திருநாட்களும், நன்னாள் தீநாட்களும், பெருநாள் சிறுநாட்களும் இருந்த இடந்தெரியாமல் இறந்து போகும்.

ஆனால், ஏழைகளும், பணக்காரர்களும், கற்றவர்களும், கல்லாதவர்களும், சிற்றரசர்களும், பேரரசர்களும், நூலாசிரியர்களும், பத்திரிகாசிரியர்களும், அரசியல்வாதிகளும், சமூக சீர்திருத்தவாதிகளும், மதவாதிகளும் ஆகிய அனைவரும் "கடவுள்" என்பதற்கு இடையூறு நேராமல் பாதுகாப்புச் செய்யவே முன்னிற்கின்றனர். இந்த நிலையில் யார்தான் ஆண்மையோடும், அறிவோடும் முன்வந்து கடவுளின் பொருளற்ற தன்மையை விளக்கிக்காட்டக்கூடும்? கடவுளின் பொருளற்ற கட்டுப்பாட்டை நன்கறிந்த அறிஞர்கள் கூட உலகத்திற்கு அஞ்சி தமது கருத்தை வெளியிடாமலே இருக்கின்றனர். எந்த நாட்டிலும் மிகுந்த நெஞ்சாண்மைபடைத்த ஒரு சிலரே கடவுளின் பொருளற்ற தன்மையைப்பற்றிய தங்கள் கருத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

பண்டைக் காலத்தில் நமது நாட்டிலிருந்த புத்தர் என்ற பெரியார் "கடவுளைப்பற்றிக்கவலைப் படவேண்டாம்" என்று கூறிப் போந்தார். சீனதேசத்துப் பெரியாராகிய "கண்பூஷியஸ்" என்னும் பெரியார் "தெரியாத ஒன்றைப்பற்றிக்கவலைப்படுவது அறிவீனம்" என்று சொல்லியுள்ளார். இன்னும், பல பெரியார்கள் கடவுள் என்பது இன்னதென்பதைத் திட்டமாகத்தெரிந்து கொள்ளாத காரணத்தாலோ, அல்லது அது பொருளற்ற மொழிதான் என்ற உண்மையைத் தெரிந்துகொண்ட காரணத்தாலோ அன்புதான் "கடவுள்" என்றும், அறிவுதான் "கடவுள்" என்றும், இன்பந்தான் "கடவுள்" என்றும், ஆனந்தம்தான் "கடவுள்" என்றும் கூறிப் போந்தனர்.

மேல் நாட்டுப் பேரறிஞர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களில், "ஸ்பைனோசா" என்பவர் "கடவுளுக்கு நன்மை தீமையாவது, சந்தோஷம் கோபமாவது, அன்பு வெறுப்பாவது இல்லை" என்றும், "மனிதன் விஷயத்தில் யாதாமொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ளாததுதான் தனது கடவுள்" என்றும் கூறியிருக்கிறாராம்.

"கான்ட்" என்ற ஜெர்மன் தத்துவ ஞானியும், "ஸ்பென்சர்" என்ற பிரபல தத்துவ ஞானியும் கடவுளை "தெரிய படாதவர்" என்று கூறியிருக்கிறார்களாம்.

ஆகவே இதுகாறும் எவரும் துணிந்து "கடவுள் என்பது பொருளற்ற மொழி; அதற்கு இலக்கான பொருள் ஒன்றும் இல்லை; மக்களின் அறியாமையாலும், அச்சத்தாலும் தோன்றியதே கடவுள் என்னும் வெறுஞ் சொல்; ஆகையால் அச்சொல்லுக்கு யாரும் மயங்கவேண்டாம்; எதற்கும் தங்கள் சொந்த அறிவையே நம்புங்கள்" என்று கூற முன்வந்தார்களில்லை.

ஆனால் தற்போது நமது நாட்டில் வசித்து வருபவரும், ஏறக்குறைய எழுபது வயதுடையவரும், மேல்நாட்டுக்கல்வியிலும், நமது நாட்டுத் தத்துவ நூல்களிலும் சிறந்த பயிற்சியும், ஆராய்ச்சியும் உடையவரான ஒரு அறிஞர் கடவுளைப் பற்றி ஆராய்ந்த தமது முடிவைக் கீழ்க்கண்டவாறு வெளியிட்டிருக்கிறார்.

"பிரபஞ்சத்தில் உள்ள உலகங்களில், நமக்குத் தெரிந்த வரையில் இவ்வுலகில் வாழும் பிராணிகளுக்குள்ளே மனிதன் ஒருவன் தான் "கடவுள்" என்ற கற்பனையை கற்பித்திருக்கின்றவன். இவன் குணத்திற்கும், இவன் அறிவிற்கும், இவன் அநுபவத்திற்கும், இவன் நடைபுடை பாவனைக்கும் தக்கவாறு தான் கற்பித்த கடவுளுக்குக் குணத்தையும், அறிவையும், அநுபவத்தையும், நடைபுடை பாவனையையும் அமைக்கின்றான். வேடனுடைய கடவுள் வேட்டையாடுகின்றது; திருடனுடைய கடவுள் திருடுகின்றது (கள்ள அழகர் கடவுள்) விபசாரிகளுடைய கடவுளும் விபசாரம் செய்கின்றது. மோசக்காரர்கள் கடவுள் மோசம் செய்கிறது, மீன் பிடிப்போர் கடவுள் மீன் பிடிக்கின்றது சண்டை போடுகின்றவன் கடவுள் சண்டை போடுகின்றது. ஆண் பெண் உருவங்களைப்பாவனை செய்து (Monagamy) அதாவது ஒரு பெண் சாதித்திட்டத்தில் கட்டுப் பட்டவனுடைய கடவுள் ஒரு பெண் சாதியுடனும், பல பெண்சாதித் திட்டத்தில் இருப்பவனுக்கு (Polygamy) உரிய கடவுள் பல பெண்சாதியையும் உடையதாகப் பாவிக்கின்றான். குளிர் தேசத்தில் உள்ள கடவுளுக்கு, கம்பளியை ஆடையாகப் போர்த்துகின்றான். உஷ்ண பூமியில் நிர்வாணமாகவே கடவுளை அமைக்கின்றான். இன்னும் பற்பல வினோத திருஷ்டாந்தங்களால் பக்தனைப் போலவே கடவுளும் அமைக்கப் படுகிறாரே ஒழிய கடவுளுமில்லை, கடவுளுக்குக் குணமுமில்லை, எல்லாம் மனிதனுடைய கற்பனைகளென அறிக."

என்பது மேலே நாம் குறிப்பிட்ட அறிஞருடைய மொழியாகும். இவர் பெயர் திரு. எம். சிங்காரவேலு என்பதாகும். இவரைப் பற்றி நமது நாட்டினர்க்கு நான் கூற வருவது நகைப்பிற்கிடமேயாகும். "கடவுள் இல்லை" என்று அஞ்சாமல் ஆணித்தரமான சான்றுகளுடன் கூறும் நூல் இவரால்எழுதப்பட்ட "கடவுளும் பிரபஞ்சமும்" என்னும் ஒன்றேயாகும். இத்தகைய ஒரு சிறந்த ஆராய்ச்சி நூல், இதுகாறும் எம்மொழியிலும் வெளிவந்ததில்லை.

பெரும்பாலும், அறிஞர்களில் "கடவுள் உண்டு" என்று நம்பிக்கொண்டிருக்கின்றவர்கள், "கடவுள் இல்லை" என்று சொல்லும் இயற்கை வாதிகள் கூற்றை எள்ளி நகையாடுவர். காற்று வீசுவது, சூரியன் புறப்படுவது, சந்திரன் தோன்றுவது, இடி உண்டாவது, மழை தோன்றுவது, மின்னல் மின்னுவது போன்ற இயற்கை நிகழ்ச்சிகளைக் காட்டி இவைகளால் கடவுள் உண்டு என்று கூறி ஆராய்ச்சியற்றவர்களை ஏமாற்றுவார்கள். ஆனால் மேற்கூறிய இயற்கை நிகழ்ச்சிகளின் காரணங்களை விஞ்ஞான சாஸ்திர மூலம் அறிந்தவர்கள் மயக்கமுற மாட்டார்கள். "கடவுளும் பிரபஞ்சமும்" என்னும் நூலில் இவைகளுக்குக் காரணங்கள் விளக்கப்பட்டுள்ளன. நில நூல், வான நூல், இயற்கைப் பொருள் நூல் முதலிய உண்மை நூல்களின் நுட்பத்தை அறிந்தவன், இயற்கை நிகழ்ச்சிக்குக் கடவுள் காரணம் என்று மயக்கமுற மாட்டான் என்பது திண்ணம். தற்கால அறிஞர்களால் ஆராய்ந்து, சோத

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க,

குடி அரசு.

ஈரோடு 1932 ஜூலை மீ 17-உ

# தாழ்ந்தப்பட்டார் விடுதலை.

—:0:—

## இந்துக்கள் மாயவலை.

பொதுவாக உலகில் வாழும் ஜீவப் பிராணிகள் எல்லாம் இன்பத்தையே அடைய விரும்புகின்றன. இது உலக சுபாவமாகும். இதுபோலவே அறிவில் சிறந்தவர்கள் என்று கருதப்படும் மனிதர்களும் இன்பத்தோடு வாழ விரும்புவதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆனால் மற்ற ஜீவப்பிராணிகளுக்கும், மனிதர்களுக்கும் தாங்கள் சௌக்கியமடையும் விஷயத்தில் ஒரு வித்தியாசம் மாத்திரம் உண்டு. மற்றய பிராணிகள், வேறுள்ள ஜீவன்களை யெல்லாம், தங்களுக்கு அடிமையாகவைத்துக்கொண்டு, அவைகளின் உழைப்பால தாங்கள் கஷ்டப்படாமல் சௌக்கியமாக ஜீவிக்கவேண்டும் என்று நினைப்பதில்லை. ஒவ்வொரு ஜீவப்பிராணி வகையும் தாமே உழைத்து வருந்திச் சௌக்கிய மடைகின்றன. ஆனால் மனிதன் மாத்திரம் பிற மனிதரைத் தமக்குக்குக் கீழ் அடங்கி நடக்கும்படி செய்து, அவர்கள் உழைப்பைக்கொண்டு, தான் சிறிதும் கஷ்டப்படாமல், சுகமனுபவிக்க ஆசைப்படுகின்றான். இக்குணம் முற்காலத்தில் ஒரு மனிதனிடம் உற்பத்தியாகி, பின்பு அது பல மனிதர்களிடம் பரவி, கடைசியில் ஒரு கூட்டத்தினரிடம் நிலைத்து விட்டது என்று யூகித்துக்கூறுவது பொருத்தமாக இருக்கலாம். இக்குணத்திற்கே "சுயநலம்" என்று சொல்லப்படுவது. இக்குணத்தையே தொழிலாகக்கொண்ட ஒரு கூட்டம் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக உலகில் இருந்து கொண்டுதான் வருகிறது. இக்கூட்டத்தினரின் சூழ்ச்சியினால் தான் உலகில் சற்போது நமது கண்முன் காணப்படும், எண்ணற்ற சாதிப்பிரிவுகளும், மதவேற்றுமைகளும், கொடுமைகளும், குருட்டுப்பழக்க வழக்கங்களும் ஏற்பட்டு நிலை பெற்று வருகின்றன.

எங்கும், "சமத்துவம்" "சகோதரத்துவம்" "விடுதலை" "சுதந்திரம்" என்னும்வார்த்தைகள் தோன்றி, சுயநலக்கூட்டத்தாரின் சூழ்ச்சியால் அடிமைப்பட்டு மனிதத் தன்மையை மறந்து கிடந்த மக்களை விழிக்கச் செய்கின்ற இக்காலத்திலும் பரம்பரையாக கஷ்டமின்றிச் சுகம் அனுபவித்து வந்த கூட்டத்தார் தங்கள் சுயநலத்தை விட்டுக்கொடுக்கச் சம்மதிக்காமலிருப்பதில் ஆச்சரியமில்லை. நெடுங்காலமாக அனுபவித்து வந்த சௌக்கியத்தைத் திடீரென்று எப்படி தியாகம் பண்ணிவிட முடியும்? தங்கள் சமத்துவத்திற்குப் போராடத் தூக்கத்தினின்று எழுந்து புதிய ஊக்கத்துடன் முன்வந்திருக்கும் மக்களை மீண்டும் அடிமைப்படுகுழியில் வீழ்த்தவே முயற்சி செய்வார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆனால் "மனுதர்மத்தை"ச் சட்டமாகவும், அதை ஆக்கிய பார்ப்பனர்களை மந்திரிகளாகவும், குருமார்களாகவும் வைத்துக்கொண்டு அரசாண்ட இந்திய மன்னர்களின் அரசாட்சி ஒழிந்து "பிரிட்டிஷ்" அரசாட்சி ஏற்பட்டதின் பலனாக, இன்று மனிதத்தன்மையை மறந்து அடிமையாகக் கிடந்த மக்கள், தங்கள் மனிதத்தன்மையைப் பெற முயற்சிக்கின்றனர். பழய இந்து மன்னர்களின் அரசாங்கம் இப்பொழுதும் நமது நாட்டில் நிலைத்திருக்குமாயின், இன்று தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் விரும்புவது போலவும், கிளர்ச்சி செய்வது போலவும், சமத்துவத்திற்கும், சுதந்திரத்திற்கும் கிளர்ச்சி செய்வார்களானால், கட்டாயம் அச்சமூகத்தார் முழுவதும், சித்திர வதைக்கும் சிரச்சேதத்திற்கும் உட்படுவார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்ட பின், தாழ்த்தப்பட்ட மக்களில் சிலர் கொஞ்சம் கல்வி பெற்றதன் பயனாலும், தாங்களும் மற்றவர்களைப்போல் மனிதர்கள் தான் என்பதை உணர்ந்ததன் பயனாலும், தாங்கள் உழைக்க பிறர் அதைக்கொண்டு உயிர் வாழ்ந்து, தங்கள் தலைமேலேயே உட்கார்ந்து கொண்டு அமிழ்த்திக் கொண்டிருக்கும் கொடுமையை உணர்ந்ததன் பயனாலும், தாங்கள் இந்துக்களினின்றும் தனியாகப்பிரிந்தால் ஒழிய தங்களுக்கு ஒரு வித விமோசனமும் ஏற்படாது என்பதை அறிந்து அதற்காகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். இக்கிளர்ச்சி சமூகத்திலிருந்து ஆரம்பித்து அரசியலிலும் நுழைந்து விட்டது.

இந்துக்களின் அரசாட்சி ஒழிந்து விட்டகால முதலே அவர்கள் ஆதிக்கமும் குறைந்து விட்டது. ஆகையால் எப்பொழுதும் அடக்கி ஆண்டுவந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தினரை மதத்தைக்கொண்டாவது, வேத சாஸ்திரங்களைக் கொண்டாவது, பலாத்கார அதிகாரத்தைக்கொண்டாவது இனியும் அடக்கி வைத்திருக்க முடியாது என்பது நிச்சயம். ஆகவே அரசியல் ஆதிக்கம் பெற்றால்தான் அவர்களை முன்போல அடக்கி ஆள முடியும். இந்தக்காரணத்தால் தான் வெள்ளைக்காரர்களின் ஆதிக்கத்தைக்குறைத்து தங்கள் கையில் ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் வைத்துக்கொள்ளக் கூடிய "சுயராஜ்ய"த்திற்காகச் செய்யப்படும் கிளர்ச்சியில், உயர்ந்த சாதிக்காரர்களும், வைதீகர்களும், மத பக்தர்களும் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

திரு. காந்தியுள்ளிட்ட காங்கிரஸ்காரர்களும், பண்டித மாளவியா, திரு மூஞ்சேயுள்ளிட்ட இந்து மகாசபைக்காரர்களும் தாழ்த்தப்பட்ட கூட்டத்திற்குத் தனித்தொகுதி ஏற்படுத்தக்கூடாது என்று பலமாக எதிர்ப்பதற்குக் காரணம் இதுவேயாகும். முஸ்லிம்கள் தனித்தொகுதி வேண்டிப் பிரிந்து நிற்கும் காலத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தாரும், மற்ற சிறுபான்மைச் சமூகத்தாரும் தனித்தொகுதி பெற்றுப் பிரிந்து நிற்பார்களாயின் இந்து சமூகத்தாரின் கூட்டம் சட்டசபைகளில் மைனாரிட்டியாகிவிடும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறாகி விட்டால், தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் தமக்கு வேண்டிய சௌகரியங்களை முஸ்லிம்களுடையவும், மற்றச் சிறுபான்மைச் சமூகத்தினருடையவும் பிரதிநிதிகளின் உதவி பெற்றுச் சட்டசபைகளின் மூலம் செய்துகொள்ளலாம் என்பதில் சந்தேகமில்லை. இவ்வகையாகத் தாழ்த்தப் பட்ட மக்கள் சமத்துவம் பெறக்கூடிய சந்தர்ப்பம் பெற்று விட்டால், அது, இது வரையிலும் அவர்களைக் கொடுமைப் படுத்தி அடக்கியாண்டு வந்த உயர்ந்த சமூக இந்துக்களின் சுயநலத்திற்குப் பாதகம் உண்டாக்காமற் போகாது. இக்கருத்துக்களைக் கொண்டு தான் "காங்கிரஸ்" பிரதிநிதி என்ற பெயரோடு "வருணாச்சிரமதரும"த்தின் பிரதிநிதியாகச் சென்ற திரு காந்தியவர்களும், மற்ற இந்து மகா சபையைச் சேர்ந்தவர்களுமான வட்ட மேஜை மகாநாட்டுப் பிரதிநிதிகள், தாழ்த்தப் பட்டவர்களுக்குத் தனித்தொகுதி ஏற்படுத்துவதை ஒரேயடியாக எதிர்த்தார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஆனால், இச்சூழ்ச்சியை அறிந்த தாழ்த்தப்பட்ட மக்கள், தங்களுக்குத்தனித்தொகுதியே வேண்டுமெனவிரும்புகின்றனர். அச்சமூகத்தினரின் தலைவர்களாகிய, திருவாளர்கள் டாக்டர் அம்பெட்கார், ஆர். சீனிவாசன், எம். சி. ராஜா, வி. ஐ. முனுசாமிபிள்ளை போன்ற தலைவர்களெல்லாம் தங்களுடைய சமூகத்திற்குத் தனித்தொகுதியே வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். இவர்களில், திரு. எம். சி. ராஜா அவர்களைத் தவிர மற்றவர்கள் இன்றும் தனித் தொகுதி வேண்டுமென்பதிலேயே உறுதியாக இருக்கின்றனர்.

திரு. எம். சி. ராஜா மட்டிலும், எவ்வித சூழ்ச்சியினாலோ ஏமாற்றப்பட்டு இந்து மகா சபையைச் சேர்ந்த திரு. மூஞ்சே அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தனித் தொகுதியை எதிர்த்தும், கூட்டுத் தொகுதியை ஆதரித்தும் பிரசாரம் பண்ணிக் கொண்டு வருகிறார். உண்மையில் இப்பிரசாரத்திற்குக் காரணம், இந்துக்களின் சூழ்ச்சி யென்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்துக்களின் வலையிற் சிக்கியிருக்கும், திரு. எம். சி. ராஜா அவர்களைப் போல் அவர்களுடைய வலையிற் சிக்கிய வெகு சிலரே ராஜாவின் பேச்சை ஆதரிக்கின்றார்கள்.

ஆனால், திரு. ராஜா அவர்களின் அபிப்பிராயந்தான் தாழ்த்தப்பட்டவர்களின் அபிப்பிராயம் என்று நினைக்குமாறு, இந்துக்களின் ஆதிக்கத்தில் இருக்கும் தேசீயப் பத்திரிகைகள் எனப் பெயர் வைத்துக் கொண்டிருப்பவை, திரு. ராஜாவை ஆதரித்து விளம்பரம் பண்ணிக் கொண்டு வருகின்றன.

உண்மையில் தாழ்த்தப் பட்ட சமூகம் சமத்துவம் பெற வேண்டுமானால், அவர்கள் இந்துக்களினின்றும் பிரிந்து தங்கள் கால் பலத்தில் நின்று கொண்டே கிளர்ச்சி செய்தால் தான் முடியும் என்பதை நாம் அடிக்கடி எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஆகவே டாக்டர் அம்பெட்கார், சீனிவாசன், வி. ஐ. முனிசாமி பிள்ளை ஆகியவர்கள் விரும்புகிறபடி அரசியல் சீர்திருத்தத்தில் தனித் தொகுதி பெற்றால் தான் தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலை பெற முடியும். இவர்கள் கூறுவது

தன் தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் அபிப்பிராயம் என்பதையும், திரு. எம். சி. ராஜாவின் அபிப்பிராயம் இந்துக்களின் அபிப்பிராயமே தவிர தாழ்த்தப் பட்ட சமூகத்தாரின் அபிப்பிராயம் அல்லவென்பதையும் சென்ற 5-5-32ல் கம்டியில், திரு. வி. ஐ. முனுசாமி பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் கூடிய அகில இந்திய தாழ்த்தப்பட்டார் காங்கிரஸ் தீர்மானத்தைக் கொண்டும், சென்ற 10-7-32ல் பம்பாயில் திரு. எம். சி. ராஜா அவர்கள் தலைமையில் கூடிய தாழ்த்தப்பட்டார் மகாநாட்டைக் கொண்டும் அறியலாம். டாக்டர் அம்பெட்கார் கட்சியை ஆதரிப்போரால் கூட்டப் பட்ட கம்டி காங்கிரசுக்கு, பல மாகாணங்களிலிருந்தும் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தனர். தனித் தொகுதியை எதிர்க்கும் கட்சியினரும் வந்திருந்தனர். அவர்கள் மிகச் சிலராக இருந்த காரணத்தால் மகாநாட்டை விட்டு வெளியேறி விட்டனர். ஆகவே தனித்தொகுதியை ஆதரிப்பதாகவும், இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டின் போது இங்கிலாந்தில் செய்து கொள்ளப் பட்ட சிறுபான்மையோர் ஒப்பந்தத்தை ஆதரிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த மகா நாட்டிற்கு இந்துக்களின் எதிர்ப்பு இருந்ததே தவிர ஆதரிப்பு சிறிதும் இல்லை, ஆகவே இம்மகாநாட்டுத் தீர்மானங்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தாரின் உண்மையான அபிப்பிராயம் என்று கூறுவதற்கு என்ன தடையுண்டு?

பம்பாயில், திரு. எம். சி. ராஜா கட்சியினரால் கூட்டப்பட்ட மகாநாட்டிற்கு சுமார் 200, பிரதிநிதிகளே வந்திருந்தனர். மகாநாட்டிற்கு எதிராகத் தனித் தொகுதியை ஆதரிக்கும் கட்சியைச் சேர்ந்தவர்கள் 250 பேர்கள் மகாநாட்டுக் கொட்டகைக்குள் விடப்படாமல் தடுக்கப்பட்டிருக்கின்றனர். 250 என்னும் எண்ணிக்கை, பொதுத் தொகுதியை ஆதரிக்கும் தேசீயப் பத்திரிகைகளில் காணப்படுகின்றதாதலால், இது உண்மையாக இருக்க முடியாது. 250க்கு மேல் அதிகமாகத்தான் இருக்க வேண்டும். அன்றியும் இம்மகாநாடு இந்துக்களின் ஆதரவின் மேல் தான் கூட்டப் பட்டதாகும். ஆகவே இம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானங்கள் இந்துக்களின் அபிப்பிராயத்தைச் சேர்ந்தனவேயொழிய, தாழ்த்தப் பட்ட சமூகத்தாரின் அபிப்பிராயத்தைச் சேர்ந்தவையென்று கூற முடியாது என்பது நிச்சயம். இம்மகா நாட்டில் தான் கூட்டுத் தொகுதியை ஆதரிப்பதாகவும், "ராஜா—மூஞ்சே ஒப்பந்தத்"தை ஆதரிப்பதாகவும், வட்டமேஜை மகாநாட்டில் செய்யப்பட்ட "சிறுபான்மையோர் ஒப்பந்த"த்தை எதிர்ப்பதாகவும் தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்து மகாசபைக்காரர்களின் தூண்டுதலால் நடத்தப்பட்ட இந்த மகாநாட்டில் தலைமை வகித்த திரு. எம். சி. ராஜா அவர்கள் பேச்சில் காணப்படும் வாதங்களிலும் ஒரு புதுமையும் தோன்றவில்லை. வழக்கம்போல் இந்துக்களை ஆதரித்தால்தான் தாழ்த்தப் பட்ட சமூகத்தாருக்கு அரசாங்கத்தில் மந்திரி முதலிய உத்தியோகப்பதவிகிடைக்குமென்றும், இந்துக்களின்துணையோ, உதவியோ, இல்லாமல் தாழ்த்தப்பட்ட சமூகத்தார் சமத்துவமோ, சுதந்திரமே, பெறமுடியாதென்றும் கூறியிருக்கிறார்.

அடிக்கடி இவர் மந்திரி பதவியையே கூட்டுத்தொகுதிக்கு உதாரணமாகக்கூறிவருவதைக் கொண்டு, மந்திரிப்பதவி மோகத்தினாலேயே இந்து மகாசபைக்காரரின் பாட்டுக்குத்தாளம் போடுகிறார் என்று கூறுகிறார்கள். அது எப்படியாவது இருக்கட்டும். இந்து சமூகத்தினரின் உதவியோ, துணையோ, இல்லாமல் தாழ்த்தப்பட்டார் சமத்துவம் பெற முடியாது என்னும் வாதத்தை மாத்திரம் கவனிப்போம்.

இதுவரையிலும் பல ஆயிரக் கணக்கான வருஷங்களாக இந்துக்களின் தயவை எதிர்பார்த்து வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு அவர்கள் செய்த நன்மையென்ன? தாழ்த்தப்பட்டவர்களைக்கல்விகற்க அனுமதிக்காமலும், தெருவில் நடக்க அனுமதிக்காமலும், நல்ல உடை உடுத்த அனுமதிக்காமலும், கிணறு குளங்களில் தண்ணீர் எடுக்க அனுமதிக்காமலும் செய்தது தான் கிடைத்த பலன். பிரிட்டிஷ் அரசாங்கம் இருக்கின்ற இக் காலத்தில்கூட. தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பொது இடங்களில் சமத்துவம் கொடுக்க மறுக்கிறார்கள் என்றால் பிரிட்டிஷ் அரசாங்கம் இல்லாமல் தங்கள் கையிலேயே எல்லா அதிகாரமும் இருக்குமானால் என்னதான் செய்ய மாட்டார்கள் என்றுகேட்கிறோம். இதைப்பற்றி நாம் அதிகமாக விரித்துக்கூறவேண்டியதில்லை. "இந்துக்களின் தயவை எதிர்பார்த்துக்கொண்டும், தங்களையும் இந்துக்கள் என்று நினைத்துக்கொண்டும் இருக்கும் வரையிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விமோசனமே உண்டாகப்போவதில்லை" யென்று கோபுரத்தின்மேல் நின்றும் கூறுவோம்.

ஆகையால் இந்து மகாசபைக் காரர்களின் வலையிற்சிக்குண்டு கிடக்கும் திரு. எம். சி. ராஜா கூட்டத்தாரின் பேச்சைக்கேட்டு ஏமாறக்கூடாது என்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

கொடுமைப்படுத்தப்பட்டு, நசுக்கப்பட்டு, அடிமையாக்கப்பட்டுக்கிடக்கும் சமூகத்தின் சமத்துவத்திற்கும்,முன்னேற்றத்திற்கும் உண்மையாகப்பாடுபடுகின்றவர்கள் யார் என்பதை வெகு சுலபமாகத்தெரிந்துகொள்ள ஒரு வழியுண்டு, அவ்வழியாவது:—

தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் விடுதலைக்கு உண்மையாகப் பாடுபடுபவர் அச்சமூகத்தைத் தாழ்த்தி வைத்திருக்கும் கூட்டத்தினரால் கட்டாயமாக எதிர்க்கப்படுவார்கள்;தூஷிக்கப்படுவார்கள், பலவிதமான பழிகளுக்கு ஆளாக்கப்படுவார்கள்; என்பது நிச்சயம். ஆதலால் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பரம்பரை விரோதிகளாகிய உயர்ந்த சமூகத்தினரால் "தேசத்துரோகி" யென்றும், "சமூகத்துரோகி" "தேசாபிமானமில்லாதவர்" என்றும் தூற்றப் படுகின்றவர்கள் யாரோ அவர்களே அச்சமூகத்தின் உண்மையான சமத்துவத்திற்கும், சுதந்தரத்திற்கும் பாடுபடுகின்றவர்கள் என்பதை உணரலாம்.

இப்படியில்லாமல் தாழ்த்தப் பட்ட சமூகத்தினரின் விரோதிகளாகிய உயர்ந்த சமூகத்தினரால் தாழ்த்தப்பட்ட சமூகத் தலைவர்கள் என்றும் விடுதலைக்குப் பாடுபடுகிறவர்கள் என்றும், "தேசாபிமானிகள்" என்றும், இவர்கள் பேச்சைக்கேட்டால்தான் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு விடுதலை உண்டு என்றும், பிரசாரம் செய்யப்படுபவர்களால் அச் சமூகத்திற்கு உண்மையான விடுதலை ஏற்படமுடியாது என்பது நிச்சயம். ஆகையால் எவர் தங்கள் சமூகத்தின் உண்மையான விடுதலைக்குப் பாடுபடுகின்றவர் என்பதை அறிந்து அவர்களைப் பின்பற்றுமாறு தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு எச்சரிக்கின்றோம்.

இந்து மகா சபைக்காரர்களின் சூழ்ச்சி வலையிற்சிக்கியும், தேசாபிமான வேஷக்காரர்களின் பசப்பு வார்த்தைகளுக்கும், தட்டிக் கொடுத்தலுக்கும் ஏமாற்றமடைந்தும், தங்கள் சமூக நன்மையை, இதுவரையிலும் விரோதிகளாகவே யிருந்துவரும் சமூகத்தார் கையிலேயே ஒப்படைக்க வேலை செய்யும் ஏமாந்தவர்களின் பேச்சைக்கேட்டு மோசம் போகாமலிருத்தலே தாழ்த்தப் பட்டார் கடமையாகும்.

## பெண்கள் அடிமை நீங்குமா?

—:0:—

இந்தியப் பெண்களுக்கு எத்தகைய கல்வியளிக்க வேண்டும் என்பதைப்பற்றிப் பலர் பலவாறான அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகிறார்கள். அவைகளில் பிற்போக்குடையவர்களின் அபிப்பிராயங்களை இப்பொழுது எந்தப் பெண்களும் ஒப்புக்கொள்ளத்தயாரில்லை. முற்போக்குடையவர்களின் அபிப்பிராயங்களையே பெண்கள் வரவேற்கத்தயாராயிருக்கிறார்கள்.

"இந்தியப் பெண்கள் இதுவரையிலும் இருந்தது போலவே, தங்களுக்கென்று ஒருவித அபிப்பிராயமும், சுதந்திரமும் இல்லாமல், "கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன்" என்று சொல்லுவது போல கணவனுடைய நன்மையை மாத்திரம் கருதி அடிமையாகவே இருந்து, பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டும், அவைகளை வளர்த்துக்கொண்டும் வாழ்வதே சிறந்தது; இதுவே இந்தியப் பெண்களுக்கு வேண்டிய நாகரீகம்; இந்நாகரீகத்தை மீறினால், இந்தியப் பெண்களின் சமுதாய வாழ்க்கையின் உயர்வு கெட்டுப்போகும்; அவர்களுடைய பதிவிருதா தர்மம் அழிந்து போகும்; இதனால் இந்திய நாகரீகமே மூழ்கிவிடும்; ஆகையால் பெண்களுக்குக் குடும்பக் கல்வியும், மதக்கல்வியும் மாத்திரம் அளித்தால் போதும்" என்று பிற்போக்கான அபிப்பிராயமுடையவர்கள்கூறிவருகின்றனர். ஆனால் ஆண்கள் இவ்விதமான அபிப்பிராயத்தை வெளியிடுவதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்கள் தங்கள் சுயநலத்தைக்கருதுகின்ற பொழுது, இதற்கு மேல் தீவிரமான அபிப்பிராயத்திற்குச் செல்ல முடியாது; சென்றால் அவர்களுடைய சுயநலத்திற்கு நிச்சயமாக ஆபத்து உண்டாகிவிடும்.

ஆனால் பெண்கள் இம்மாதிரியான அபிப்பிராயத்தை வெளியிட்டால் அது ஆச்சரியப்படத்தக்கதேயாகும்; அன்றியும் அதில் வேறு ஏதாவது சூழ்ச்சி இருக்கவேண்டும் என்றுதான் நினைக்கவும் வேண்டும்.

சில தினங்களுக்குமுன் லண்டனில், லீசியம் கிளப்பில், பம்பாய் சர்வகலாசாலைப் பெண்கள் சங்கத்தின் ஆண்டுவிழாவில், சென்னை, கிறிஸ்துவப் பெண்கள் கலாசாலைத்தலைவரான திருமதி, மெக்டாக்கல் என்பவர் ஒரு பிரசங்கம் செய்தார். அப்பொழுது அவர்,

"பெண்மக்கள் உயர்தரக் கல்வி கற்பதனால் குற்றமற்ற பயன் உண்டாகும் என்று சொல்ல முடியாது. இந்தியப் பெண்கள் பக்தியிலும், மனோ உறுதியிலும் சிறந்தவர்கள். அவர்களுக்குக் குடும்பத்தில் மிகவும் சம்பந்தமும், பற்றுதலும் உண்டு. அவர்கள் குடும்பத்தில் உள்ளபற்றுதலிலிருந்து நீங்குவார்களானால் இந்திய சமூக வாழ்க்கைக்கு மிகுந்த பாதகம் ஏற்பட்டு விடும். ஆகையால் அவர்களுக்குப் போதிக்கும் உயர்தரக் கல்வியுடன் கிறிஸ்தவ மதத்தின் உயர்ந்த தத்துவங்களையும் சேர்த்துப் போதிக்கவேண்டும்; இன்றேல் உயர்தரக் கல்வியால் பெண்களுக்கு மிகுந்த ஆபத்தே உண்டாகும்"

என்று பேசியிருக்கிறார். திருமதி மெக்டாகல் அவர்கள் நாகரீகம் பெற்ற மேல்நாட்டுப் பெண்மணியாயிருந்தும் இவ்வாறு பேசியிருப்பதைக் கண்டு உண்மையில் நாம் வருந்தாமலிருக்க முடியவில்லை. ஆனால் இந்தியப்பெண்களின் சமுதாய வாழ்க்கையைப் பற்றி இந்த அம்மாளுக்கு இவ்வளவு கவலை தோன்றியிருப்பதைப் பற்றி ஆராயும்போது நிச்சயமாக அதில் ஒருசூழ்ச்சியிருக்கவேண்டுமென்றமுடிவுக்கேவரலாம். அச்சூழ்ச்சியும் அந்த அம்மாளின் சொற்களிலேயே காணப்படுகின்றது. அச்சூழ்ச்சி "உயர்தரக்கல்வியுடன் கிறிஸ்தவ மதத்தின் உயர்ந்த தத்துவங்களையும் சேர்த்துப் போதிக்க வேண்டும்" என்பதேயாகும். ஆகவே இது கிறிஸ்துவமதத்தை இந்தியாவில் பரவவைப்பதற்குச் செய்யப்படும் பிரசாரத்தைத்தவிர வேறொன்றுமல்ல என்றுதான் நாம் கூறுவோம்.

கிறிஸ்துவமதத்தைச் சேர்ந்த திருமதி மெக்டாகல் அவர்கள் எப்படி "கிறிஸ்துவ மதக்கல்வி" உயர்தரக்கல்வி கற்கும் பெண்களுக்கு அவசியம் என்ற அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களோ இதைப்போலவே இந்திய வைதீகர்களும், பெண்களுக்கு இந்த மதக்கல்வி அவசியம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இவ்வபிப்பிராயங்களை நாம் அடியோடு மறுக்கிறோம். "பெண்களுக்குக் குடும்ப வாழ்க்கையில் அடிமையாயிருந்து பிள்ளைகளைப் பெற்று வளர்த்துக் கொண்டிருப்பது ஒன்றுதான் ஏற்றது" என்ற அபிப்பிராயமே தவறாகும். இத்தகைய கட்டுப்பாடு இருக்கின்றவரையிலும் பெண்கள் அடிமைகளாகத்தான்— அதாவது ஆண்களுடைய உதவியை நம்பித்தான் வாழ முடியும் என்பது நிச்சயம். உண்மையில் பெண்களும் ஆண்களுக்குச்சமமாக வாழவேண்டுமானால், அவர்களும் ஆண்களைப்போலவே தாங்கள் விரும்பியகல்விகளைக்கற்கவும், தங்கள் அறிவுக்கும், ஆற்றலுக்கும், விருப்பத்திற்கும் இசைந்த எத்தொழில்களையும் தடையின்றிச்செய்யவும் உரிமைவேண்டியது அவசியமாகும்.

அல்லாமலும் மதக்கல்வி என்பது அவர்கள் காதில்கூட விழக்கூடாது என்பதே நமதபிப்பிராயம். மதத்தைப்பற்றித்தெரிந்து கொண்டிருக்கிற ஆண் மக்களே இன்று அடிமைப்புத்தியினாலும், மூட நம்பிக்கைகளாலும் கிடந்து சீரழிகின்ற செய்தியைப்பற்றி நாம் அடிக்கடி கூறிவருகின்றோம். "மதம் என்பதுதான் மக்களிடத்தில் அடிமைப்புத்தியையும், பயங்கொள்ளித்தனத்தையும், தன்னம்பிக்கையின்மையையும், மூடநம்பிக்கைகளையும் உண்டாக்கக்காரணமாயிருக்கின்றது. ஆதலால் மதத்தையே அடியோடு ஒழிக்க வேண்டும்" என்று பிரசாரஞ் செய்து வருகின்றோம். இந்த நிலையில் "பெண்களுக்கு மதக் கல்வி யளிக்கவேண்டும்" என்னும் அபிப்பிராயத்தை நாம் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

சாதாரணமாக மதக்கல்வி கற்காவிட்டாலும், கேள்விமூலமும், பழக்கவழக்கங்களின்மூலமும், மதவிஷயமாகக்கொஞ்சம் தெரிந்து கொண்டிருக்கும் நமது பெண் மக்களின் நிலையை ஆராய்ந்தால் அதன் மோசத்தை அறியலாம். நமது பெண் மக்கள் மனத்தில் இன்று அடிமைப் புத்தியும், கோழைத்தனமும், மூடநம்பிக்கைகளும், முருட்டுப் பழக்க வழக்கங்களால் விடாப் பிடிவாதமும் நிறைந்திருப்பதற்குக் காரணம் மதமே என்பதை யார் மறுக்க முடியும்? ஆதலால் பெண்களுக்கு மதக்கல்வி வேண்டும் என்று சொல்லுகின்ற அபிப்பிராயத்தை நாம் ஒரு சிறிதும் ஒப்புக்கொள்ள முடியாது.

"பெண்களும் ஆண்களைப் போல் உடல் வலிமையிலும் சிறப்படைய வேண்டும். தேகப் பயிற்சி, ஆயுதப்பயிற்சி முதலிய பழக்கங்களைப் பெற்றிருக்கவேண்டும். தங்களை மானபங்கப்படுத்த நினைக்கும் அறிவற்ற, வெறிகொண்ட ஆண் மக்களை எதிர்த்துத் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளக்கூடிய ஆற்றலையும் பெற்றிருக்க வேண்டும். சமயம் நேரும் போது, படைவீரர்களாகச் சேர்ந்து பகைவர்களை எதிர்க்கக் கூடிய சக்தி பெண்களுக்கும் இருக்க வேண்டும்" என்பதே நாகரீகம் பெற்ற மக்களின் அபிப்பிராயம்; பெண்மக்களும் இவ்வபிப்பிராயத்தை முழு மனத்தோடு ஆதரிக்கிறார்கள். உலகத்தின் போக்கும் அபிப்பிராயமும் இப்படியிருக்க, "பெண் மக்களுக்கு உயர்தரக் கல்வி கற்பிப்பதனால் பயனில்லை" என்று சொல்லுவதை யார் ஒப்புக் கொள்ள முடியும்?

ஆனால் தற்காலத்தில் உள்ள கல்வி முறை மிகவும் மோசமானதென்பதை நாம் ஒப்புக் கொள்ளுகின்றோம். வெறும் குமாஸ்தா வேலைக்குப் பழக்கக் கூடிய கல்விதான் இப்பொழுது கற்பிக்கப்படுகிறதே யொழிய வாழ்க்கைக்குப் பயன்படும் கல்வி கற்பிக்கப் படவில்லை என்பது உண்மையாகும். ஆகையால் தற்காலத்தில் உள்ள கல்விமுறையை மாற்றி, வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய முறையிலும், சிறிதும் மத நம்பிக்கைகளும், கோழைத்தனமும் அடிமைப் புத்தியும் உண்டாகாத வகையிலும் உள்ள கல்வித் திட்டத்தை ஏற்படுத்தி பெண்களுக்கும், ஆண்களுக்கும் சமத்துவமான கல்வியளிக்க ஏற்பாடு செய்வதே மக்கள் முன்னேற்றத்திற்கு ஏற்றதாகும் என்று கூறுகிறோம்.

---

## தீண்டாதார் மகாநாடு.

### கூட்டத்தில் குழப்பம்.

-இந்திய தீண்டாதார் மகாநாடு 10-7-32ல் மாலை ராவ்பகதூர் எம். ஸி. ராஜா தலைமையில் கூடியது. இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

தலைவர் எம். ஸி. ராஜா விக்டோரியா ஸ்டேஷனில் தான் வந்திறங்குவார் என்ற எண்ணத்தில் சுமார் 200 250 அம்பெத்காரது ஆட்கள் கருப்புக் கொடிகளுடனும் திரண்டு சென்றுகாத்திருந்தனர். இவர்கள் குழப்பம் செய்வார்களென்றெண்ணிய எதிர்கட்சியார் முன்னெச்சரிக்கையாய் தலைவரை தாணா ஸ்டேஷனில் இறக்கி மோட்டார் வழியாக மகாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச்சென்றார்கள். காத்திருந்து ஏமாறிய கூட்டத்தார் மகாநாட்டுப் பந்தலுக்குச் சென்று உள்ளே பிரவேசிக்க முயன்றனர். ஆனால் அங்கிருந்த தொண்டர்களை விட மறுக்கவே அங்கிருந்த தொண்டர்களுக்கும், இவர்களுக்கும் ஏற்பட்ட வாய்ச்சண்டை முற்றி கைகலந்து இருகட்சியாரும் சண்டையிட ஆரம்பித்தனர். கலகத்தில் கல்லடிகளும், சோடாபுட்டிகளும் பறந்ததாகச்சொல்லப்படுகிறது. சண்டை சுமார் 15 நிமிஷம் நடந்ததென்றும் சுமார் 45 தொண்டர்கள் காயமடைந்ததாகவும் தெரிகிறது.

பின்னர் போலீஸ் பந்தோபஸ்துடன் கூட்டம் நடைபெற்றதாகவும் தலைவர் பிரசங்கத்தின் பின் கூட்டுத்தொகுதியை ஆதரித்தும் வேறு சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டவுடன் கூட்டம் கலைந்ததாகவும் தெரிகிறது.

---

## பாஞ்சாலி — ராமைய்யா திருமணம்.

கோட்டாறு உயர்திரு எஸ். ராமலிங்கம் அவர்களின் சகோதரரும் பிரபல சுயமரியாதை தொண்டருமான தோழர் திரு.ராமைய்யா அவர்கட்கும் ஷை ஊர் திருமதி. பாஞ்சாலி அம்மையார் அவர்கட்கும் 10-7-32 ஞாயிறு அன்று எவ்வித மூடசடங்குமின்றி சுயமரியாதை முறைப்படி திருமணம் இனிதுமுடிவுற்றது.

(ஒரு நிருபர்.

---

## ஈரோடு முனிசிபாலிட்டி

## விளம்பரம்.

ஈரோடு யூனைடெட் கிளப் உபயோகத்திற்காக முனிசிபல் கவுன்சில் ஹாலுக்கு வடபுறம் 26 அடி நீளம், 18 அடி அகலமுள்ள இடத்தை 10 வருஷ வாய்தாவிற்கு வருஷம் ரூ. 1—0—0 வீதம் வாடகைக்கு விட இக்கவுன்சிலார் தீர்மானித்திருக்கிறார்கள். இது விஷயமாய் ஆக்ஷேபனையிருந்தால் சேர்மென் அவர்களுக்கு 1—9—1932 தேதிக்குள்தெரியப்படுத்திக் கொள்ளவும்.

ஒப்பம் கே. ஏ. ஷேக்தாவுத்,
சேர்மன்.

(9ம் பக்கத்தொடர்ச்சி)

...ளை செய்து இயற்றப்பட்டிருக்கும் விஞ்ஞான நூல்களின்சான்று கொண்டே "கடவுள்" என்பது கற்பனை என்பதை இந்நூலில் விளக்கிக் காட்டப் பட்டிருக்கின்றது.

"உலகம் ஒருவனால் படைக்கப்பட்டதன்று, தானே உண்டானது" என்று கூறுவோர்க்கும் தக்க விடை கூற மாட்டாத கடவுட் காப்பாளர்கள் "கோழி முதலில் உண்டானதா? முட்டை முதலில் உண்டானதா?" என்றும், "வித்து முதலில் உண்டாயிற்றா? மரம் முதலில் உண்டாயிற்றா?" என்றும் இரண்டொரு கேள்விகளைக் கேட்டு விடுவார்கள்; ஆனால் நமது ஆசிரியர், திரு. ம. சிங்காரவேலு அவர்கள் இக்கேள்விக்குப் பரிணாம வாதத்தைக் கொண்டு தக்க பதில் அளித்திருக்கிறார். இதைப் படித்தவர்கள், மேற்கண்டவை போன்ற கேள்விகளுக்குச் சிறிதும் பின் வாங்காமல் விடையிறுக்கலாம்.

புராணக்காரர்கள், கடவுளைக் கற்பித்திருக்கும் பொய்புரைகளையும், தத்துவ நூலாசிரியர்கள் கடவுளைப் பற்றிக் கூறும் கற்பனைகளையும், விஞ்ஞான முகத்தால் ஆராய்ந்து அவைகள் யாவும் கற்பனைகள் என்பதை வெளியிட்டிருக்கிறார்.

சில அறிஞர்கள், கடவுள் என்பது ஒன்று இல்லை யென்றாலும், அப்படி ஒன்று இருப்பதாக நம்பிக்கை வைத்துக் கொண்டிருந்தால் தான் மக்கள் நல்லொழுக்க முடையவர்களாக வாழ்வார்கள், கொடுந்தொழில்களைச்செய்ய அஞ்சுவார்கள், ஆகையால் மக்களை அஞ்சி நடக்கச்செய்வதற்கு "கடவுள் நம்பிக்கை இன்றியமையாதது" என்னும் வழக்கைக்கடைசியாகக் கூறுகின்றனர்.

இவ்வழக்கையும் ஆராய்ந்து இந்நூலில் தக்க முடிவு கூறப்பட்டிருப்பது எப்படிப்பட்ட அறிஞர்களையும் ஒப்புக்கொள்ளச் செய்யாமற்போகாது, "மூட பக்தியால் பாமர மக்களுக்கு விளையும் கெடுதிகள் யாவும் மதஸ்தர்களும், மத பக்தர்களும் முன் கட்டிய பொய்க்கதைகளென அறிக. இவர்கள் மூடத்தனமான காரியங்களில் கட்டிய கதைகளை நம்பியே பாமர ஜனங்களுக்குப் பில்லி, சூனியம், பேய், பிசாசுகளின்மேல் நம்பிக்கை விழுந்திருக்கிறது. கடவுள் நாம் பார்க்கும் இயற்கை காரியங்களுக்கும் சம்பவங்களுக்கும் மாறுகக்காரியங்களைச் செய்தார் என்றும், சம்பவங்கள் நடந்தனவென்றும், கூறும் கட்டுக்கதைகளை நம்பி, நோய்களுக்குச் செய்யவேண்டிய பரிகாரங்களைச்செய்து தீர்த்துக்கொள்ளாமல் தெய்வங்களாலும், பேய் பிசாசுகளாலும், நோய்கள் உண்டாகின்றன வென நம்பி அந்த தேவதைகளுக்குப்பூசை, பலி முதலிய உபயோகமற்ற காரியங்களைச்செய்து, நோய்களைப்போக்கிக்கொள்ளாமல் சாகின்றனர். இந்த மூடப்பழக்கத்தினாலேயே நமது நாட்டில் அரைக்கோடி மக்கள் அகால மரணமாகின்றார்கள்" என்று கடவுள் நம்பிக்கையால் நமது மக்களுக்கு உண்டாகும் தீமையை எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றது. கடவுள் நம்பிக்கையால் மக்களுக்குத்தீமை உண்டாவதைத்தவிர நன்மை சிறிதும் உண்டாகவில்லை என்பதற்கு இதை விட வேறு என்ன சான்று வேண்டும்?

மற்றும் "அவதாரங்கள்" என்று சொல்லப்படும் பெரியார்கள் செய்த செயல்கள் எல்லாம் இயற்கைக்கு இயைந்தனவேயன்றி இயற்கைக்கு மாறான செயல்கள் எதையும் செய்யவில்லை யென்பதையும், இயற்கைக்குமாறாகச் செய்யப்பட்டதாகக்கதைகளில்கூறப்படும் நிகழ்ச்சிகள்வீண் கட்டுக்கதைகளே என்பதையும் "கடவுளும் பிரபஞ்சமும்" என்னும் நூலைக்கற்பார் எளிதாக உணர்ந்து கொள்ளலாம்.

இவ்வுலகத்தில் எந்த இடங்களைத்துருவித்துருவி ஆராய்ந்தாலும் "கடவுள்" தங்கியிருக்கும் இடம் ஒன்று இருப்பதாக காணமுடியாது. ஆகையால்தான் முன்னோர்கள் "கடவுளை" அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தவர் என்றும், சர்வ. வியாபி என்றும், கூறிப்போந்தார்கள். அன்றியும் கடவுளைப்பற்றி நூல்களில் சொல்லப்படுவனயாவும் இயற்கைக்குமாறான பொருத்தமற்ற கூற்றுக்களேயாகும். கடவுள் என்றால் என்ன? என்பதைப்பற்றி இதுவரையிலும் எந்த அறிஞர்களும், விஞ்ஞானிகளும், பெரியார்களும், விளக்கிக்கூறவில்லை. பஞ்சபூதங்களின் இயற்கை நிகழ்ச்சிகளை ஆராய்ந்து அறிந்த எவரும் "கடவுள்" என்ற ஒரு பொருள் இருக்கவோ, அது உலக நிகழ்ச்சிகளை நடத்தவோ, நடத்துவிக்கவோ, வேண்டிய அவசியமே இல்லையென்பதைக் காணலாம். எல்லாம் இயற்கையால் நிகழ்கின்றனவேயன்றி நாம் அறியப்படாத ஒருபொருளால் ஒரு செயலும் நடைபெறவில்லை யென்பது திண்ணம். உண்மையில் நூல்களில் சொல்லுகின்றபடி "கடவுள்" என்று ஒருபொருள் இருக்குமாயின் அப்பொருளை நல்லதென்றோ, கெட்டதென்றோ ஆராயவேண்டும் உலகில் நிகழும் நன்மைகளையும், தீமைகளையும், உற்று நோக்கினால் முன்னோர் கடவுளுக்குக் கற்பித்திருக்கும் குணங்கள் பொருந்தாதென்பதைக்காணலாம், ஆகையால் எந்தவகையிலும் கடவுளுக்கும், உலகிற்கும் ஒரு சம்பந்தமும் இல்லையென்பது திண்ணம், என்னும் கருத்துக்களை அத்தியாயம் அத்தியாயமாக வகுத்து "கடவுளும் பிரபஞ்சமும்" என்னும் நூலில் கூறப்படுகின்றது.

இதிலெட்டு அத்தியாயங்களும், சில சந்தேகங்களுக்கு விடைகளும், இரண்டு அனுபந்தங்களும் அடங்கியுள்ளன.

கடவுளைப்பற்றி நாம் கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகளை அகற்றத்தகுந்த கருவியை நமக்களித்த திரு. சிங்காரவேலு அவர்களுக்குத் தமிழ் நாடு என்றும் நன்றிபாராட்டும்கடப்பாடுள்ளது. கடவுளைப்பற்றிக் கண்மூடிக்கதரும் 'ஆஸ்திக அன்பர்கள்' இதை ஒருமுறை படித்துப்பார்த்தபின் "கடவுள் இல்லை" என்போரைப் பற்றிப்பழிகூறுவதைத் தொடர்ந்து நடத்துவதே அறிவுடைமையாகும். இப்புத்தகம் குடிஅரசு வெளியீடாகும்.

---


## "குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

**வேலூர்.**
வி. டி. ராஜமாணிக்கம், நியூஸ் ஏஜண்ட்.

**கரூர்.**
சிங்காரவேல்பிள்ளை, ஆப்காரி கண்ட்ராக்டர்.

**திருப்பூர்.**
முருகேசம், நியூஸ் ஏஜண்ட்

**திண்டுக்கல்.**
சிக்கந்தர்கான்சாயபு. மலைக்கோட்டைதெரு.

**காரைக்குடி.**
விஸ்வநாதம், வெற்றிலைக்கடை கல்லுக்கட்டி.

**மதுரை.**
வி. டி. சங்கரலிங்கம், செட்டியூரணி தெரு.

## உடனே தேவை.

நமது பத்திரிகை விற்பனை செய்வதற்குக் கீழ்க்கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் உடனே தேவை.

சேலம்.
கோயம்புத்தூர்.
பொள்ளாச்சி.
ஜோலார்பேட்டை.
தஞ்சாவூர்.
வாணியம்பாடி.

விபரங்களுக்கு எழுதவும்.

மேனேஜர்,
குடி அரசு.

# நோட்டீஸ்.

—o—

கோயமுத்தூர் முனிசிபல் குப்பை, கஸ்மா எருவு டிப்போக்களிலும், நாளது தேதிவரை சேர்ந்திருக்கும் எருவு முதலியவைகளையும், 1932-வருஷம் ஆகஸ்டு மாதம் 1-ம் தேதிமுதல் 1933-வருஷம் மார்ச்சு மாதம் 31-ம் தேதிவரை சேரும் எருவுகளையும், எடுத்துக்கொள்ளும் சுதந்திரத்தை 1932-வருஷம் ஜூலை மாதம் 25-ம் தேதி திங்கட்கிழமை மாலை 5-மணிக்கு முனிசிபல் ஆபீசில் முனிசிபல் சங்கத்தாரால் பகிரங்கமாய் ஏலத்தில் விடப்படும்.

ஏலநிபந்தனைகளை ஆபீசில் தெரிந்துகொள்ளலாம்.

முனிசிபல் ஆபீஸ்,
கோயமுத்தூர்
13-7-1932.

சி. எஸ். ரத்தினசபாபதி
சேர்மன்.

## மழை வருஷிக்கச் செய்வதெப்படி?

### ருஷியாவில் புதியமுறை.

உலகிலுள்ள சீதோஷ்ணஸ்திதி ஆராய்ச்சிக்கரரர்கள் ஒரு இடத்தின் சீதோஷ்ண ஸ்திதியை செயற்கையாகமாற்றவாவது. மழையைநினைத்த போது வருவிக்கவாவது அல்லது புயற்காற்றை வேறுவழியில் செல்லும்படி விடவாவது முடியாது என்ற விஷயங்களைப்பற்றி அபிப்பிராய பேதம் படமாட்டார்கள். இருப்பினும் சோவியத் கவர்ன்மெண்டார் செயற்கையாக மழையை வருவிக்கும் இலாகா ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். விவசாயம் செய்யப்பட்ட நிலங்களில் அதிகமாக மழை பெய்தால் பயிர்கள் கெட்டுப்போய் விடுமென்று கருநிமேகங்களைக் கலைத்துவிட புதிய முறை கண்டுபிடித்திருக்கின்றனர். இதற்குச் செலவும் அதிகமாகும் எனத்தெரிகிறது.

மழை உண்டாகும் விதத்தை அறிந்தவர்களுக்கு இயற்கையன்னையின் வேலைகளைத் தடுக்கமுடியாது. என்பது நன்குவிளங்கும். சூரியனே சிறந்த அடுப்பாக இருக்கிறது. இதனின்று உண்டாகும் உஷ்ணத்தினுல் சமுத்திரத்திலுள்ள நீரானது ஆவியாக பரிணமித்து மேலே செல்கின்றது. ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு அங்குலமழைபெய்வதற்கு 113 டன்கள் நிறையுள்ள நீரை ஆவியாக மாற்ற வேண்டியதாக யிருக்கின்றது. ஒரு சதுரமைல் விஸ்தீரணத்திற்கு படத்தில் ஒரு புள்ளி போன்றிருககும் ருஷ்யாவுக்கு 72-320 டன் நிறையுள்ள நீராவி வேண்டியதாயிருக்கின்றது.

மழையை வருவிப்பவர்களிடம் மின்சாரம் வரவர அதிகபிரபலமாகியிருக்கிறது. செற்கை மழையையும், பனிக்கட்டியையும் உண்டாக்குவதற்காக சோவியத் இலாகாமின்சாரம் உண்டாகும் இயந்திரங்களை ஆகாயக்கூண்டுகளின் மூலமாக மேகத்திற்கு மேல் செல்லும்படி விடுகின்றனர். மின்சாரம் எவ்வாறு மழையைகீழே வருஷிக்கும் என்பது நன்கு விளங்கவில்லை.

சோவியத் ஆராய்ச்சிக்காரர்கள் தங்களுடைய தொழிற்சாலையில் மூடுபனியையும் மழையையும் உண்டாக்கியிருக்கின்றனர். ஆனுல் இந்தமுறையை மிகவும் பெரிய வழியில் உபயோகித்து நூற்றுக்கணக்கான சதுரமையில் நிலங்களுக்கு மழையைக் கொண்டுவரவும் முயற்சிக்கிறார்கள்.

"முன்னேற்றம்"

## சென்னகரம்பட்டிச் சீர்திருத்தமணம்.

மதுரை ஜில்லா மேலூர் தாலூக்கா சென்னகரம்பட்டியில் 8—7—32 வெள்ளிக்கிழமை இரவு 9-மணிக்கு சிவகெங்கை யூனியன் சேர்மன் தோழர் எஸ். ஆர். எம். வெங்கடாசலம் அவர்களின் தலைமையில் தோழர் பி. யு. மாயாண்டி அம்பலம் அவர்களின் குமாரர் தோழர் பொன்னையா அவர்களுக்கும் தோழர் சின்னாண்டி அம்பலம்அவர்களின் புதல்வி திருமதி மூக்கம்மாள் அவர்களுக்கும் சீர்திருத்த முறையில் திருமணம் நடைபெற்றது. மதுரை சிவகெங்கைமுதலிய இடங்களிலிருந்து தோழர்கள் பலர் வந்திருந்தார்கள். விவாக வைபவம் சிறப்புடன் பெற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## "சிவகெங்கையில் சீர்திருத்தமணம்."

சென்ற 10—7—32ல் அரியக்குடி திரு. எஸ். சீனிவாசனுக்கும், இந்நகர் திருமதி. எஸ். காமாக்ஷியம்மாளுக்கும் திரு. எஸ். ராமசாமிசேர்வை தலைமையில் விவாகம் நடந்தது. அதுசமயம் அரியக்குடி திரு. கே. மாணிக்கனுல் திருமண ஒப்பந்தங்கள் சொல்லி மணம் ஒருமணி நேரத்தில் இனிது முடிந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## காலஞ்சென்ற திரு. ஏ. சீதப்பமுதலியார்.

பிரபல வியாபாரியும், பொதுநலப்பிரியருமான திரு ஏ. சீதப்ப முதலியார் அவர்கள் தமது 52 வது வயதில் பெருந்துரையில் காலகதி அடைந்தார்.

(ஒரு நிருபர்)

## இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?


# வெள்ளை வெட்டைக்கு

## சந்தனாதி மாத்திரை, பிரமேக நெய்

### சாப்பிட்ட 12 மணி நேரத்திற்குள் குணம் தெரியும்.

வெள்ளை வெட்டை வியாதிகள் எவ்வளவு நாள் சென்றதாயிருந்தாலும் சரி, பொருக்க முடியாத நீர்குத்தல், நீர்க்கடுப்பு, பிரமேகம், கல்லடைப்பு, சதை அடைப்பு, தாது நீரில் கலந்து வெளியாகுதல், நீர்விடுவதற்கு முன்னும் பின்னும் இந்திரியம் சொட்டு சொட்டாய் வெளிவருதல், ரெத்தவெட்டை, மஞ்சள் வெட்டை, அஸ்திகாங்கை, எலும்புருக்கி, சொற்பன ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், அஸ்திமேகம், இந்திரிய பையில் ஏற்படும் ரணம், கொதிப்பு முதலிய நீர்த்தாரையிலுண்டாகும் சகல வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்யும்.

சந்தனாதி மாத்திரை பிரமேக நெய் இரண்டும் சேர்ந்து விலை ரூ. 5—0—0

# சாலாமிசிரி லேகியம்.

## சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

### மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0.

பாக்கிங் தபால் சிலவு பிரத்தியேகம், மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினுபள்ளி

# தேசத்துரோகிகள் யார்? சீற்றங்கொள்ளாது சிறிது சிந்தித்துப்பாருங்கள்.

[தோழர். எம். என். கோவிந்தசாமி]

இன்று நாட்டின் பெயரால் சிறைபுகுந்த மக்கள் பலர் இருப்பினும் நாம் பொதுவாக அதிலுள்ள பணக்காரர்களையும் பட்டதாரிகளையும் விளம்பரக்காரர்களையுமே பொதுவாக தேசத்துக்குப் பெரும் தொண்டாற்றும் தேசீய மகான்கள் என்றும் அவர்கள் நாட்டிலுள்ள ஏழை மக்களின் நன்மையை நாடி, தங்கள் சுகபோகங்களைச்சிறிதும் பொருட்படுத்தாது, சுய நலமென்பதனைவிடுத்து, தியாக உணர்ச்சியை மேற்கொண்டு தேசத்துக்காகவும் ஏழை மக்களுக்காகவும் கதராடையுடுத்தி காங்கிரசின் பெயரால் சிறைசென்ற உத்தமர்கள் என்று கொட்டை எழுத்துக்களால் அவர்களது பெயரை அச்சிட்டு வெளியாக்கும் காங்கிரஸ்பத்திரிகைகள் பலஉளவென்பதை நேயர்கள் அறியக்கூடும். அப்படி அவர்கள் நாட்டிலுள்ள ஏழை மக்களுக்கு நன்மை புரிந்தால் அதை மனமாற நாமும் அவர்களைப்போற்றாமலிருக்கமுடியாது.

ஆனால் அவர்களது தியாக உணர்ச்சி எந்த அளவில் செல்லுகிறதென்பதை நாம் சிறிது சிந்தித்துப்பார்க்க வேண்டுவது நமது கடமையாகும். இன்றளவில் காங்கிரசின் பெயரால் சிறை சென்றவர்கள் ஆயிரக்கணக்கான மக்கள் என்பதனையாவரும் மறுக்கமுடியாததாகும். ஆனால்சிறை சென்ற யாவரும் ஒரேவித தண்டனையும் பணக்காரன் ஏழை என்ற வித்தியாசம் பாராட்டாமல் யாவரும் தேச பக்தர்கள் என்ற முறையில் நடத்தப்படுகிறார்களா? அல்லவா? என்பதனை ஊகித்துப்பார்க்கவேண்டியது மிக அவசியமாகும். தேசத்தின் பெயரால் அருந்தொண்டாற்றிய பலரிருக்க, ஒரு சிறுபான்மையோருக்கு மாத்திரம் கட்டிலும் மெத்தையும் போதாக்குறைக்குப் பத்திரிகைவாசிப்பதற்கு வேண்டிய வசதியும் என்ன வேண்டியதிருக்கிறது என்பதைக்கேட்கிறேன். இவர்கள் உண்மையில் தேசீய உணர்ச்சியுடையவர்களாயிருந்தால் தங்கள் சுகங்களைச் சிறிதும் கவனியாது ஏனைய ஏழை மக்களைப்போல் எளிய வாழ்க்கையை நடத்தவல்லவோ முன்வரவேண்டும்? அது நிற்க அவர்கள் துன்புற்றிருக்கவும் இவர்கள் இன்புற்றிருக்கவும் என்ன காரணம் உளது?

இவர்களது சகோதரர்களான ஏழை மக்கள்கள் படும் துன்பத்தை பக்கத்திலிருந்துகொண்டு பார்த்திருக்க மனம் சகிக்கிறது? இவர்களது மனம் கல்லாக இருக்கவேண்டும்? அல்லது இரும்பாக இருக்கவேண்டும் இவர்கள் சிறைச்சாலையிலிருந்து மீளுங்கால் நன்றாக கொழுத்துப் பருத்து முன்னைய விட பன்மடங்கு கனபாடியாகவல்லவோ வருகிறார்கள். ஏழை மக்கள் உடம்பிலுள்ள இரத்தத்தை அங்கேயே கக்கிவிட்டு கவலைமிக்குடையராய், தள்ளாடிக்கொண்டு தங்கள் இல்லம் வந்து சேருகின்றனர். இக்கனபாடிகளோ சிறை வாயிலை விட்டிறங்கியதும் நான்கு பேர் உட்காரக்கூடிய மோட்டாரில் தாங்கள் ஒருவர் மாத்திரம் உட்கார்ந்துகொண்டு கடையிலுள்ள பூமாலைகளைக்கழுத்தில் வாரிப்போட்டுக்கொண்டு ஜெய பேரிகையுடன் அநேகவரவேற்பைப்பெற்றுக்கொண்டு போதாக்குறைக்குப்பல விருந்துகளிலும் கலந்துகொண்டு கொழுத்துப் பருத்து வீடுகளுக்குச் செல்லுகிறார்கள்.

அன்பர்களே! இதில் யாருக்குக் கஷ்டம்? யாருக்கு நஷ்டமென்பதனை நினைத்துப்பாருங்கள்? கஷ்டமும் நஷ்டமும் ஏழைகளுக்கேயன்றி பணக்காரர்களுக்கும் கிஞ்சித்தேனும் கவலையில்லையென்பதனை உணர்வீர்களாக. இப்படி இவர்கள் செய்வதால் ஏழைமக்களுக்கு நன்மை ஏற்படுமா? அல்லது தீமை ஏற்படுமா என்று யோசித்துப்பாருங்கள். இன்று ஏதோ அவர்கள் அன்றாடம் தினம் ஒன்றுக்கு நாலணா கூலிபெற்றுத் தங்கள் மனைவி மக்களைக்காப்பாற்றி வந்ததையும் கெடுத்து அவர்கள் வாயில் மண்ணைப்போட்டு அவர்களைச்சிறைக்கனுப்புவது நியாயமா? என்றுதான் கேட்கிறோம். இன்று சிறைபுகுந்து வந்த ஏழைகள் எத்தனைபேர் நன்மையை அடைந்திருக்கின்றார்கள்? அல்லது நன்மையை அடைய எதிர்பார்க்கிறார்கள்? என்று கேட்கிறோம். ஏதோ வெளிப்படையாகக்கூறாவிட்டாலும் உள்ளுக்குள் அதன் தீமைகளை நன்றாக உணர்ந்திருப்பார்கள் என்றே கூறுகிறோம். இப்படியிருக்க தேசத்துரோகிகள் யார்?

ஏழை மக்களுக்கு மேன்மேலும் துன்பத்தையும் வறுமைப்பிணியையும் உண்டாக்குகிறவர்களா? அல்லது மனித சமூகத்தில் உயர்வு தாழ்வு கிடையாது, ஆண்பெண் இருபாலாரும் சமம், யாவர்களும் வித்தியாசமின்றி அவர்களது உரிமைக்காக போராடுவதற்கு உரிமையுண்டு அதனால் ஒரு சமூகமோ ஒருநாடோ கெட்டுவிடாது. நாட்டில் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் கூடாது. சுயராஜ்யம் பெறுமுன் சுயமரியாதையைபெறவேண்டும். இன்றேல் நாட்டிற்கு நன்மை ஏற்படாது என்று சுயமரியாதைக்காரர்கள் கூறினால் அவர்கள் தேசத்துரோகிகள், நாட்டை பாழாக்குகிறார்கள், ஈ. வெ. இராமசாமியாரும் அவரது இயக்கமும் அழிந்தாலன்றி நாடு முன்னேறாது என்று மந்திர உபதேசஞ் செய்கிறார்கள். எத்தனையோ கடவுள்களும் இருளன், காட்டேரிகளும் கணக்கிலடங்காத குட்டிச்சாத்திகளும் அவைகளைத்தோற்றுவித்து மந்திர வித்தைக்காரர்களும் எங்களை எதிர்க்க முடியாமல் நாட்டைவிட்டு வேறிடஞ்செல்ல வழியின்று வங்காளக் குடாக்கடலிலாவது விழுந்து மாள்வோம் என்று எண்ணிக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் இவர்கள் வீண் கூச்சல் விழலுக்கிறைத்தநீரையொக்குமென்பதனை உணர்வார்களாக.

---

(5ம் பக்கத்தொடர்ச்சி)

பிரமாதமில்லை, செத்தப்போன பிள்ளையைக்கூட எங்கள் சமயகுரவர் உயிருடன் எழுப்பியிருக்கிறார். விபூதியைக்கொண்டு "மந்திரமாவது நீறு" என்று பதிகம்பாடிப்பூசிநோய் தீர்த்திருக்கிறார்கள்; இந்தவரலாறு புராணத்திலிருக்கிறது என்று பெருமை பேசுகிறார்கள்.

இப்படியே, நாம் எதைக்கூறினும் வைதீகர்கள், உடனே "ஒன்றும் புதியதல்ல எல்லாம் எங்கள் முன்னோர் கண்டதுதான் எல்லாம் ஏட்டிலிருக்கிறது" எனக்கூறி நம்மையும் முட்டாள் என மதித்து முறைத்துப் பார்க்கின்றனர். இந்த இடத்தில்தான் "ஏட்டுச்சர்க்கரை இனிக்குமா" என்ற கேள்வி எழுகிறது! இதற்கு "எல்லாம் ஏட்டிலிருக்கிறது" எனப் பெருமை பேசும் பண்டிதக்கூட்டம் பதில் கூறவேண்டும்.

ஏட்டிலிருப்பதே மகிமை, பெருமை, திருப்தி, என்றிருந்தால் அதை நம்பும் இந்த வைதீகர்கள் சாதத்தைச்சமைத்துப் பானையில் வைத்து மூடிவிட்டுப் பேசாதிருப்பார்களா எனக்கேட்கிறோம். வயிறுபசித்தால் "வயிறே! வயிறே!! பசியாதே சாதம்பானையிலிருக்கிறது" என்று செஞ்சுருட்டிஇராகம், ஏக தாளத்தில் சுரம்போட்டு ஏன் இவர்கள் பாடி வயிற்றைச்சமாதானம் செய்து பசியை அடக்கிக்கொள்ளக்கூடாதெனக் கேட்கிறோம்.

"மந்திரமாவது நீறு" என்று பதிகம்பாடி நோய்தீர்க்கும் பெருமை பேசுபவர்கள் தங்களுக்கோ, அல்லது தங்கள் குடும்பத்தில் வேறு யாருக்கேனுமோ, எந்தவித நோய்வந்தாலும் சாவதானமாக விபூதியைப்பூசி பதிகம்பாடி நோய் தீர்த்துக்கொள்வதைவிட்டு மண்டையடித்தவுடன் "அமிர்தாஞ்சனம்" டப்பாவை எடுப்பதேன் என்றுகேட்கிறோம். தங்கள் பிள்ளைகளை "எல். எம். பி.," "எல். எம். அண்டு எஸ்.," "எம். பி. பி. எஸ்.," "ஐ. எம். எஸ்.," முதலிய பட்டங்கள் பெறும் டாக்டர் படிப்புக்கு ஏன் அனுப்புகிறார்களென்று கேட்கிறோம். திருநீறு பூசிப் பதிகம்பாடி நோய் தீர்த்தபடலம் புராணத்திலிருக்கத்தான் செய்கிறது. திருநீறும், மாட்டுச்சாணத்தைச்சுட்டு ஏராளமாக உண்டாக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்க இவற்றை விட்டுவிட்டு நோய்தீர்க்க டாக்டரை நாடுவதும், டாக்டர் படிப்புப்படிக்கப் பிள்ளைகளை அனுப்புவதும் இந்த ஏட்டுமகிமையால் நம்பிக்கையற்றவர்களின் செய்கையல்லவா? என்று கேட்கிறோம். இந்தக்கேள்விகளுக்கு வைதீகர்களும் "ஏட்டிலிருக்கிறது" என்று பல்லவி பாடுவோரும் தகுந்த விடையிருக்கவேண்டும்.

அக்காலத்து இந்திய மக்கள் பல உயரிய வித்தைகளை அறிந்திருந்தார்களென்று இந்தப்பண்டிதர்கள் கட்டினால் இப்பொழுது தாங்கள் அவ்வித்தைகளை மறந்துவிட்டமைக்கு வருந்தி மீறுபடியும் அவற்றை அடையும் வழியில் முனைந்து செல்வார்களானால் இவர்களை நாம் குற்றம் சொல்லுவதற்கில்லை; மற்றும இவர்களைப் போற்றவும் கடமைப்பட்டிருக்கிறோம் ஆனால் நடைமுறையில் அப்படிச்செய்வதைவிட்டு நாடு இருக்கும் அல்லோலகல்லோலமான நிலைமையும் மறந்து தாங்கள் தேவபோகத்திலிருப்பதாக எண்ணி கவி இன்பங்கண்டு களித்தும், தேவாரம்பாடிப் பொழுது போக்கியும், நாட்டைக்குட்டிச்சுவராக்குவதுடன் முன்னேற்றத் துறையில் உழைக்கவேண்டுமெனக் கூறி முன் வருவோரை "அறிவிலிகள், முன்னோர் மகிமையில் நம்பிக்கையற்றவர்கள், அதன் மகிமை அறியாதவர்கள்" என்று கூறிகடைசியில் "நாஸ்திக பட்டமும் கொடுத்து திருப்தியடைவார்களானால் இந்தப்பண்டிதர்களுக்கு எப்பெயரிட்டழைப்பதெனக்கேட்கிறோம்.

நாமோ அல்லது பிற சுயமரியாதை இயக்க அன்பர்களோ இவ்விதம் கூறுவது வைதீகர்கள், பண்டிதர்கள் ஆகியவர்களின் மனம் நோக வேண்டுமென்ற நோக்கத்தோடல்லவென்பதையும், தற்காலம் மேல் நாட்டினர் அடைந்துவரும் புதிய புதிய நுட்பங்களை அவை நம் நாட்டிற்குப் பழையவையாயிருப்பினுஞ்சரியே அன்றிப் புதியவையாயிருப்பினுஞ்சரியே, இன்று நம்மிடம் அவைகள் இல்லாதிருக்கின்றமையின் நாம் முயன்று பல அரிய விஷயங்களைக்கண்டு பிடித்து மனிதனின் வாழ்க்கையைச் சுலபமாக்கிக்கொள்ள வேண்டுமென்னும் பேரவாவினாலேயே கூறுகிறோமென்பதையும் உணர்ந்து ஆவன செய்யமுன்வர விரும்புகிறோம்.

# தமிழின்கதி.

## தமிழ் வீழ்ச்சிக்குத் தமிழ் பண்டிதர்களே காரணம்.

தமிழ் மகாநாட்டார் கவனிக்க.

—:0:—

(தோழர் ஆர். ரேத்தினசபாபதி)

இம்மாதம் துறையூரில் தமிழின் முன்னேற்றத்திற்கு வழிகாணுவான் வேண்டி ஓர் மகாநாடுகூட்டப்படப்போவதாக காரியதரிசி அறிக்கை மூலம் தெரிய வந்தது. தமிழின் முன்னேற்றத்தைக் கருதும் தமிழ் மக்களாகிய நாம் இதைக்கண்டு சந்தோஷப்பட வேண்டியதே. அங்கு விரிவுரைநிகழ்த்தப் போகிறவர்களும் பெரிய புலவர்களும், பண்டிதர்களுமாக இருப்பார்கள். அவர் தம் புலவர் திறமையையும், பண்டிதத்திறமையையும் புகழவோ, மறுக்கவோ, வெறுக்கவோ தூற்றவோ நமக்கு எக்காலும் உத்தேசம்கிடையாது. ஏனென்றால்அவர்கள் ஏராளமான தமிழ் நூல்களைப் பாராயணம் செய்திருப்பார்கள், நூல் இயற்றியிருப்பார்கள், புராணத்தைப் பற்றி பிரசங்கம் செய்வார்கள். நமக்கோ அவ்வித ஆராய்ச்சி கிடையாது. தமிழ் ஆராய்ச்சி இல்லாத நாம் பின் எவ்விதம் தமிழைப்பற்றி எழுத முடியும் என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் மகாநாடானது தமிழின் முன்னேற்றத்தைப்பற்றியதே தவிர தமிழின் உட்கருத்தைப்பற்றியதல்ல அதாவது ஓர் மொழியின் முன்னேற்றமேயாகும். இப்படிப்பட்ட தமிழ் வீழ்ச்சி நோய்க்கு நம் சிற்றறிவுக்கு எட்டியவரை மருந்து கொடுக்கலாம் என்ற உத்தேசத்துடனேயே எழுதுகிறோம். தமிழ் பண்டிதர்களைத் தவிர்த்து மற்றவர்கள் இதற்கு சிறிது பரிகாரம் தேடலாம் என்பதே நமது அபிப்பிராயம். மற்றபடி தமிழ் ஆராய்ச்சியை நம் தலையில் தூக்கிக்கொண்டு திருவள்ளுவரை நாம் ஜைனரென்று சொல்லவும் மற்றொரு பண்டிதர் இல்லை, இல்லை, அவர் ஓர் வைணவரே என்று ஸ்தாபிக்கவும் அதற்கு ஆதாரமாக அவர் பரிமேலழகர் செய்த உரையையும் தூக்கிக்கொண்டு வருவார் என்பதும் உலகப்பிரசித்தம். அப்படிப்பட்ட சோம்பேரி வாதமேவேண்டுவதில்லை.

ஏன் இப்படிச் சொல்கிறோமென்றால் இதுகாறும் பண்டிதர்கள் எனப்பட்டோர்களுள் மூலக்கொள்கைகளிலும் மிகுந்த அபிப்பிராய வித்தியாசத்துடனும், பொருமைகளுடனும் இருந்தமையாலே தமிழ் முன்னுக்கு வராமலேயே இருந்தது. இன்னும் ஓர் பண்டிதர் ஓர் நூல் எழுதுவார். அதை மற்றொருபண்டிதர் மறுத்து மறுப்பு நூல் எழுதுவார். இவர்கள் இருவருக்கும் பலபண்டிதர்கள் துணை செய்வார்கள். யுத்தமே நடக்கும். ஆகவே பண்டிதர்களுக்குள் ஒற்றுமை இல்லாமலிருந்தால் பொது சங்கமோ பொது நூல்களோ, விரிவான ராஜ்ய நூல்களோ இல்லாமல் தமிழ் கேவல ஸ்திதிக்கு வந்து விட்டது.

நிற்க பாஷை என்பது ஓர் மனிதன் மற்றோர் மனிதனுக்கு தன்னுடைய கருத்தை தெரிவிக்க ஏற்பட்ட சப்தமேயாகும். பிறகு அந்த சப்தத்தை குறிக்கக்கூடிய எழுத்துகளும், வார்த்தைகளும் ஏற்படுத்திக்கொண்டதுடன், அவ்வார்த்தைகளுக்கு அர்த்தங்களையும் உண்டாக்கிக்கொண்டான். இப்போது நெருக்கமாக ஜனங்கள் வசிப்பது போல அக்காலத்தில் வசிக்காமல் பிரிவு பிரிவாய், ஓரிடத்திற்கும் மற்றோரிடத்திற்கும் நெருங்கிய சம்பந்தமில்லாமலிருந்ததால் அவரவர்கள் தங்கள் தங்களுக்கு வேண்டிய பாஷையை உண்டாக்கிக்கொண்டார்கள். அதனாலேயே இன்று பாஷைகளின் சரியான கணக்கெடுக்கக்கூட (Census) சிறிது கஷ்டமாக இருக்கிறது. இம்மாதிரி தான் தமிழ் பாஷையும் உண்டாயது. இதை விட்டு விட்டு தமிழை சிவபெருமானே அகஸ்தியருக்கு உபதேசித்து தென்னாட்டுக்கு அனுப்பினார். [மற்ற நாட்டுக்கு சிவபெருமான் பாஷையை அனுப்பாமல் நம் தென்னாட்டுக்கு மாத்திரம் அனுப்பக் காரணம் என்ன? நம் முன்னோர்கள் பாஷையை உண்டாக்கிக்கொள்ள தெரியாமல் தெருவில் நின்றதைக்கண்டு சிவபெருமான் மனமிரங்கி அனுப்பினாரோ என்னவோ] அது தெய்வீக பாஷை என்று அதன் தலைமையில் தெய்வீகத்தை ஏற்றி அதை மாற்றக்கூடாது என்றும் ஏற்படுத்தி விட்டார்கள். சிவபெருமானே நமது முழு முதற்கடவுளே அருளிய பாஷையாகிய தமிழ் இவ்வளவு வீழ்ச்சியடையவும், கடவுள் அருளே இல்லாத ஆங்கிலம் உலகமெல்லாம் அதிகமான இலக்கண இலக்கியங்களுடன் பரவவும் காரணமென்ன வென்பதைதமிழ் பண்டிதர்களாகிய நீங்களும்,தமிழ்அபிமானிகளும் இதையும்சேர்த்து ஆராய்ச்சி செய்தால் உங்கட்கு தமிழ் முன்னேற்ற வழிதெரியும்.

நமது பண்டிதர்களோ தனித் தமிழ் தான் வேண்டுமென்பார்கள். பிற பாஷை சேரக்கக்கூடாது என்பார்கள். பிறபாஷை கலவாத தமிழ் பாஷை யாராலும் பேச முடியாது. மிகக்கஷ்டம், தமிழுடன் இப்போது ஆங்கிலப் பதங்களும் சேர்ந்து கொண்டுதான்இருக்கிறது, இதுஇயற்கை விதியாகையால் இதை ஒருவரும் தடுக்க முடியாது. முன்கால ஆங்கிலத்திற்கும் இக்காலத்து ஆங்கிலத்திற்கும் எவ்வளவோ மாற்றமுண்டு. இன்னும் மாறிக்கொண்டும் இருக்கின்றது. பிறபாஷைகளின்றும் வார்த்தைகள் சேர்க்கப்படுகின்றது. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினனே........" என்றும்நன்னூல் சூத்திரம் தமிழுக்கு எவ்வளவு சுதந்திரம் கொடுக்கின்றது பாருங்கள்.

இது ஓர் புறமிருக்க, நமது நாட்டு தேசியமானது தமிழுக்கு பெரும் விரோதியாயிருக்கின்றது. எப்படி? காங்கிரஸில் திரு. காந்தியுள்படசேர்ந்து ஹிந்தியை பொது பாஷையாக இருக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். தென்னாட்டிலுள்ள காங்கிரஸ் தலைவர்களும் "ஹிந்தி ஹிந்தி" எனக்கத்துகிறார்கள். ஹிந்தி தலையெடுத்தால் தமிழுக்கு ஆபத்து என அநேக முறை சொல்லியாய் விட்டது. ஹிந்தி பாஷையானது சமஸ்கிருதம் வல்லவர்களும், பிராமணர்களும், நீங்க மற்றவர்கட்கு அசாத்யமாயுமிருக்கிறது என ஓர் ஹிந்தியில் அனுபவப்பட்டவர் எழுதியிருக்கிறார். மேலும் அவர் சமஸ்கிருத ஞானமும், நாகர எழுத்தும் தெரியாதவர்கட்கு ஹிந்தி கஷ்டமே எனவும் கூறுகிறார். இதுவுமல்லாமல் உருதுவுக்கும் அவர் அடிபோட்டிருக்கிறார். உருதுவின் ஸ்வரூபம் ஹிந்தி எனவும் தெரிகிறது. மேலும் ஹிந்தியில் புஸ்தகங்கள் ஆராய்ச்சிக்காக இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. ஹிந்தியின் எழுத்தோ தமிழுக்கு அண்ணன். தமிழைவிட பெரிய அகராதியுடையது. ஹிந்தியின் உச்சரிப்பை நீங்கள் கவனித்திருந்தால் அதன் திவ்ய அழகு உங்கட்கு தெரியும். "ஹோதா ஹை" "ஹா" "ஹர", என்ற உச்சரிப்பு அதிகம். தமிழின் உச்சரிப்பைவிட ஹிந்தியின் உச்சரிப்புஅழகு என்று சொல்ல முடியுமா?

தமிழைவிட அழகான புத்தகங்கள் ஹிந்தியில் உளதா? ஹிந்தியில் இல்லை என்று தான் சொல்லவேண்டும்.

இந்தியாவுக்குப்பொதுபாஷைவேண்டுமானால் ஆங்கிலம் இருக்கலாம். இந்தியா முழுவதும் பாஷா வாரியாக மாகாணம் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாகாணமும் சுயாட்சியுள்ளதாக ஏற்படும் போது அரசாங்க காரியங்கள் எல்லாம், உத்தியோகங்கள் எல்லாம் தமிழிலேயே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதற்கேற்றவாறு நாம் இப்போதே தமிழை விருத்திக்குக் கொண்டுவரவேண்டும், செத்த பாஷையான சமஸ்கிருதத்திற்கு அதிக சுதந்தரமும் சர்வகலாசாலைகளில் எதனால் கொடுக்கப்படுகின்றது. நீங்கள் என்ன கிளர்ச்சி செய்தீர்கள்? ஹிந்தியை எல்லா தலைவர்களும் அனேகமாக கண்டிக்கிறார்கள். திரு. காந்தி அவர்களும் "இனி என்னை எவர் ஆங்கிலத்தில் பேசச்சொன்னாலும் நான் ஹிந்தியில் தான் பேசப் போகிறேன்" எனக்கூறினவர், துரதிருஷ்டவசமாக அந்த நீசபாஷையாகிய ஆங்கிலத்திலே ஓர் "ரிகார்டு" அதுவும் கடவுளைப்பற்றி கொடுக்க நேர்ந்தது. சமீபத்தில் திரு. ராமானந்தசாட்டர்ஜீயும் ஹிந்தியை கண்டித்திருக்கிறார். ஹிந்தி பொது பாஷையாகி விட்டால் தமிழுக்குஎன்ன கெடுதி என்று நீங்கள் கேட்கலாம். அநேக பாஷைகள் தெரிந்து கொள்வதில் ஆட்சேபணையில்லை. ஆனால் ஹிந்தி தெரியாதவன் மூன்று பாஷை படிக்க நேரிடுகிறது. இப்போது பள்ளியில் ஆங்கிலத்திற்கும் தமிழ் (ஏ. பிரிவுக்கும்) 40 மார்க்குகளுக்குக் குறையாமல் வாங்கவேண்டும். ஏன்? இதற்கு முன் மாணவர்கள் தமிழை அலக்ஷியம் செய்ததால் இப்புதுவிதி ஏற்பட்டிருக்கிறது. இதில்ஹிந்தியும்சேர்ந்துகொண்டால் வேறு ஒன்றும் வேண்டுவதில்லை. நமது தேசியப்பத்திரிகை "தமிழ் நாடு" ஆசிரியர் தோழர் வரதாராஜலு அவர்களும்,

"ஹிந்தி பாஷையைப் பொதுப் பாஷையாக ஒப்புக்கொண்டால் ஹிந்தி தெரியாதவர்கள் மூன்று பாஷைகளில் பயிற்சி பெறும்படி நேரிடுகிறது. முதலில் தாய் பாஷை இரண்டாவது பொது பாஷையாகிய ஹிந்தி, மூன்றாவது உலக பாஷையாகிய ஆங்கிலம். இம்மூன்றிலும் நேரத்தை வீணாக்குவது எவருக்கும் பயனில்லை, என்றும் இறுதியாக ஹிந்தி தெரியாதவர்கள் மூன்று பாஷைகள் படிப்பதைவிட தற்காலம் ஆங்கிலத்தையும் தாய் பாஷையாகிய தமிழையும், மட்டும் படிப்பதே போதுமானது என்று நினைக்கிறோம்" என அபிப்பிராயப்பட்டிருக்கிறார். ஆகவே தமிழுக்கு உலைவைக்கும் ஹிந்தியை உங்கள் மகாநாட்டில் மண்டையிலடியுங்கள். (தொடரும்.)

## வேண்டுகோள்.

புதிதாகத்திறக்கப்பட்ட 'எங்கள் சன்மார்க்க நிலைய இலவசவாசகசாலைக்கு தினசரி, வார, மாதபத்திரிகைகள் அநேகம் வரவழைக்கவேண்டியிருப்பதால் இதைக்கண்ணுறும் பத்திரிகையாசிரியர்கள் தயவுசெய்து தங்கள் தங்கள் பத்திரிகைகளை மாதிரிக்காகக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பும்படி கோருகிறேன். என சங்ககிரி சன்மார்க்க நிலயகாரியதரிசி அறிவிக்கிறார்.

## ஆதிதிராவிடர் துயரம்.

### வீடுகளில் தீயும் கொள்ளையும்.

### நகை, துணியணிவதே காரணம்.

சென்ற 5—7—32 பகல் 10 மணிக்கு சுமார் 200 நாட்டார்கள் ஒன்று சேர்ந்து சிவகங்கைக் கடுத்துள்ள எழுவன் கோட்டையிலும் அதில் சுற்றிலுமுள்ள சிலரை நன்முகஅடித்தும், வீட்டிலுள்ள தானியம், நகை, வெண்கலபாத்திரங்கள் கால்நடை முதலியபொருள்கள் அனைத்தையும், கொள்ளை அடித்துக் கொண்டும்போய் விட்டார்களென்று நம்பத்தக்க இடத்திலிருந்து செய்தி வந்திருக்கிறது. தங்கள் உயிர்களுக்குப்பயந்து அநேக குடும்பங்கள் அக்கம் பக்கம் கிராமங்களுக்குச் சென்றுவிட்டனர். சிலர் சிவகெங்கைக்கு வந்திருக்கின்றனர். அவர்களைக்கண்டு விசாரித்ததில் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவே இங்கு வந்தோம் என்று தெரிவித்தார்கள். வீடுகளில் மாட்டியிருந்த புகைப் படங்களும், பத்திரமாய் வைக்கப்பட்டிருந்த பத்திரம்முதலியவைகளும் நெருப்பிற் கிரையாக்கப் பட்டன என்று ஆதிதிராவிடர் தெரிவிக்கின்றனர். காரணம் என்னவென்று வினவியபோது, தங்கள் சமூகத்தார்கள் மேலாடை அணியக் கூடாது என்றும், வீடுகளில் வெண்கலப்பாத்திரங்கள் வைத்திருக்கக்கூடா தென்றும் பெண்கள் தங்கநகைகள் அணியக் கூடாதென்றும் நாட்டார்கள் கட்டளையிட்டதை ஆதிதிராவிடர்கள் கீழ்ப்படிந்து நடக்காததுதான் என்றுசொல்லுகிறார்கள். சென்ற வருஷத்திலும் இதேமாதிரி இந்தகிராமங்களில் ஆதிதிராவிடர்களைத் துன்பப் படுத்தியதைப்பற்றி சட்டசபையில் விவாதிக்கப்பட்டு இவர்கள் குறையைப்பற்றி விசாரணைசெய்ய ஒரு கமிட்டி நியமிப்பது என்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

## அருப்புக்கோட்டைத் தாலுகா தாழ்த்தப் பட்டவர்கள். 3—வது மகாநாடு.

அருப்புக் கோட்டைத் தாலுகா தாழ்த்தப்பட்டவர்களின் 3 வது மகாநாடு நாளது 1932 ஜுலைமீ 17உ ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு விருதுநகரடுத்த அழகிய நல்லூரில் திரு மதுரகவி அழர்சாமியவர்கள் சிங்காரத்தோப்பில் ரெட்டியபட்டிபோர்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டர் திரு. எஸ் என். ஜான்ரெட்டியவர்கள் தலைமையில் நடைபெறும். கல்லூரணி, சுயமரியாதைத்தொண்டர் திரு. க. அ. புன்னைமுத்து அவர்கள் மகாநாட்டைத்திறந்து வைப்பார். அன்பர் பலர்சொற்பொழி வாற்றுவார்கள். அதுசமயம் சுயமரியாதைப்பாவலர் சமதர்ம விடுதித்திறப்புவிழாவொன்றும்நடைபெறும். மகாநாட்டிற்கு அனைவரும் விஜயம்செய்யும்படி வேண்டுகிறோம் என ஒரு நிருபர் எழுதுகிறார்

## தஞ்சை, திருச்சி ஜில்லா. தமிழர்மகாநாடு.

திருச்சிஜில்லா துறையூரில் 23—24—7—32-ந்தேதிகளில் தமிழர்மகாநாடு கல்வி மந்திரி திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியாரவர்களின் தலைமையிலும், தமிழ்ப் புலவர்மகாநாடு திரு. சி. ஆர். நமசிவாயமுதலியார் தலைமையிலும், தமிழ் மாணவர்மகாநாடு திரு. டி. வி. கல்யாண சுந்திரமுதலியார் தலைமையிலும் நடைபெறுமென காரியதரிசிகள்எழுதுகிறார்கள்.

ஆனல் அரசாங்கம் பின் ஒரு நடவடிக்கையும் எடுக்காதது வருந்தத்தக்கதே. மேலும் 44 நாட்டார்களுக்குச் சொந்த ஜாமீன் வாங்கப்பட்டது. ஞாபகமிருக்கலாம். அந்தோ! தீண்டாமையே!! பரிதாபம்!!! (திராவிடன்)

## திரு. நீலாவதி ராமசுப்பிரமணியம். மறுப்பு.

திராவிடன் 9—7—32 சனிக்கிழமைப் பத்திரிகை 11 ம்பக்கத்தில் "சிராவயல் மகாத்மாகாந்தி வாசகசாலை" என்ற தலைப்பின் கீழ் வெளிவந்திருக்கும் செய்தி ஓர் புரட்டு நிருபரால் அனுப்பப்பெற்றிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## திருச்சியில் பாராட்டு விருந்து.

திருச்சி தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம், சௌந்தர்வல்லி அவர்களுக்கும் டி. என் கோவிந்தராஜலு கமலாம்பாள் அவர்களுக்கும் அன்னர் திருமணத்தைப் பற்றிபாராட்டி தென்னிந்திய நலஉரிமைச் சங்க அங்கத்தினர் களாலும், பார்பனரல்லாத இளைஞர் சங்கத்தாராலும் 10-7-32 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30-மணிக்கு திருச்சி சின்னையாபிள்ளை சத்திரமேல் மாடியில் ஓர் சிற்றுண்டி விருந்து நடைபெற்றது நகரின் பலகனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள். என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

## மதுரை சுயமரியாதைச்சங்கம்.

10—7—32 இரவு 7 மணிக்கு சங்கமாடியில் நிர்வாக சபைக்கூட்டம் கூடியது அதில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

சங்க, மே. ஜுன் மாதத்திய வரவு செலவு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

அடுத்த 3 வது சமபந்தி போஜனத்தை மணிநகரத்தில் 21—7—32—ல் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது என காரியதரிசி எழுதுகிறார்.

"செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "கரமத்எண்ணேயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons
Pilibhit R. K. Ry., U. P.

Goshaye office pillss.

கோஷாயி

ஆபீஸ் மாத்திரை



உதவி டாக்டர் Dr. T. K. V. Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—; 100-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சாரஜ் வேறு.

டாக்டர் B. A. எதிராஜ்,
(காலரா பைரி) கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

பலமுள்ளவீரபுருடனாக

குமரனாக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மனமொத்துவாழ, இல்லற இன்பம் அனுபவிக்க, புத்திர பாக்கியம் பெற வழியில்லையேன வருந்துபவர்கள்

தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபாரதாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ. 10.

மாதர்களுக்கு

இதுதான்வேணடியது

கெர்ப்ப எண்ணெய்



மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும் மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி S. I.

[4ம் பக்கத்தொடர்ச்சி]

தான் இந்நாட்டில் திரும்பத்திரும்ப நடைபெறுகிறதேயன்றி உருப்படியான எந்த வேலையும் நடைபெறவில்லை. குழந்தைகள் படிக்காவிடில் வருங்காலஉலகம் அநாகரீகத்தில் அமிழும் என்ற உண்மை பெற்றோர்கள் மனதில் பதியவேண்டும். எனக்கு அதிகாரம் இருந்தால் இந்தப் பெற்றோர்களெல்லாம் ஜெயிலில்போயிருக்கும்படி கூறி விட்டு கல்விவளர்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்வேன். தாய்தந்தையர் குழந்தை பிறந்த வுடனே ஆசாரியைக் கூப்பிட்டு நகைசெய்யச் சொல்லுகிறார்கள் சாப்பாடு போட்டுத்திணிக்கிறார்கள் வேறு இவர்கள் செய்கிறவேலை என்ன? கல்வி கொடுக்காமல் இப்படிச்செய்வது செலுலாயிட் பொம்மையை அலங்கரிப்பதென்று தான் கூறலாம். இந்த நாட்டில் தந்திவந்துவிட்டால் உடனே சாமியைக்கூப்பிடு, ஐயரைக்கூப்பிடு என்று பதறுகிறார்கள். ஏன் அப்படி? நன்றாக பணமிருக்கிறது; நன்குபடிக்கிறது; தானே, எல்லா விஷயங்களும் விளங்குகிறது. 15 ரூபாய்க்கு வேலைபார்க்கும் கிளார்க்கும்; எஜமானனை தன்னைக்கேட்டு நடக்கவேண்டுமென எண்ணுகிறான். செட்டிமார் நாட்டுப் பெண்கள் கற்காததால் ஐந்து ரூபாய் காரியமாயிருந்தாலும் ஐயர் வரட்டும், சாமிவரட்டும் என்று தமது கௌரவத்தை இழந்து பிறரைஎதிர்பார்க்கிறார்கள் கல்வியைப்பரப்ப ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும். என வேண்டுகிறேன்.

---

## முடிவுரை.

சகோதரர்களே!

சகோதரிகளே!!

இதுகாறும் பேசிய திரு அரு. சோமசுந்திரம் அவர்கள் கல்வி வளர்ச்சியைப்பற்றியும், அது எவ்விதம் பாழ்பட்டிருக்கிறது என்பதைப்பற்றியும் விளக்கமாகக் கூறியவற்றை நீங்கள் அமைதியோடு கேட்டிருந்தீர்கள். பொதுவாக மக்களுக்கு கல்விமிக அத்யாவசியமானது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால் அதை வளர்க்கப் பாடுபடுபவர் மிகச்சிலரே இருக்கின்றார்கள். முக்கியமாக பெண் கல்வி கவனிக்க வேண்டியதாகும். இந்நாட்டில் சில பள்ளிகளில் படிக்கும் பெண்கள் பூர்ணமாகப் படித்துக்கொள்ளாது அரைகுறைப்படிப்புடன் வீடுசென்றுவிடும்வழக்கம் பிரயோஜனமற்றதாகும். பெண்கள் நன்குபடித்திருந்தால் தான் பிற்காலத்தில் குடும்பவாழ்க்கையை சிக்கனமாய் கணவன்வருவாய்தெரிந்து செலவுசெய்ய மனம் வரும் கற்காத நிலையில் கணவன் நிலைமை தெரியாது கடனாவது, வாங்கிஊரார் மெச்ச விசேஷங்களை ஏக ஆடம்பரத்துடன் சிரமம் சிறிதும் எண்ணாது, கண்டபடி செலவுசெய்துவிட்டு திண்டாட்டத்திற்கு ஆளாகின்றார்கள். மேலும் படிப்பில்லாத காரணத்தால் தங்கள் சொத்தை எவ்விதம் காப்பாற்றுவதென்ற வழிதெரியாது கண்டவரிடம் கொடுத்து சொத்து முழுமையும் இழந்தும் விடுகிறார்கள். குடும்ப வாழ்க்கையில் எப்பொழுதும் வீண் சச்சரவு விட்டுக்கொண்டு மிருக்கிறார்கள். சில பெண்கள் நகைபோட்டுக் கொள்வதற்காகவே நாம் பிறந்திருக்கிறோம் என்று எண்ணியிருக்குன்றனர். நகை ஆசை ஒழியவேண்டும், அநாகரீகமான பழக்கவழக்கங்களை அடியோடு ஒழிக்க வேண்டும். ஆடவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பலவிடங்களைப் பார்வையிட்டு, பலவிஷயங்களில் நாகரீகங்களைச் கையாள முடிகிறது. ஆனால் பெண்கள் வெளிநாட்டுக்கு சென்று வந்தால் நாகரீகமாக வாழ்க்கைவாழத்தெரியும். அதற்கு ஒவ்வொருவாலிபர்களும் தங்கள் மனைவிமார்களை அயல் நாடுகளுக்கு அழைத்துச் சென்று காட்டிவரவேண்டும். செட்டிமார்நாட்டில் ஒரு பெண் சேலைவாங்குகிற செலவில் ஒருபள்ளிக்கூடம் நடத்திவிடலாம், 4 பெண்கள்சேர்ந்தால் ஒரு காலேஜ் நடைபெற முடியும், இவ்வளவு வசதியைப்பெற்று ஒன்றும் செய்யாமலிருப்பது வருத்தப்படக் கூடியதாகும். சற்றுமுன்பு இரு சிறுமிகள் பால்யவிவாஹம் குறித்துப்பேசியதைப் பார்த்தீர்கள், இம்மாதிரி இந்நாட்டில் உண்மையாக நடைபெறுகின்றதல்லவா? அடுத்த வீட்டுச்சிறுமியோடு விளையாட விரும்பும் சிறுமிக்குக்கல்யாணம் செய்ய வேண்டுமென்று தாய் தந்தையர் விரும்பினால் இதைவிட வேட்கக்கேடு வேறுஎன்ன இருக்கிறது, வெளிநாடுகளில் 20-30-வயதிற்குள் கல்யாணமென்பதே இல்லை நம்நாட்டில் 10 வயதானால் ஒருபறையனுக்குக் கொடு என்று பழமொழி கூறப்படுகிறது. அதிகம் கூறாவிடினும் பெண்களை 15 வயது வரையாவது கல்வி கற்பிக்கச்செய்து பிறகு மணவினை செய்ய முயற்சிப்பது நலமாகும். பால்யவிவாகத்தின் பயனால் தான் விதவைகள் மலிகிறார்கள். அவர்களுக்கு திரும்பவும் மண உரிமை அளிக்கவேண்டுவது அவசியமாகும். ஒரு பெண் பூச்சூட்டிக்கொள்ள ஆசைப்படுங்காலை அதை நீ விதவை சூட்டிக்கொள்ளலாகாது என்று தடுப்பதை விடவேறு என்னவேண்டும். இம்மாதிரியே அதன் ஆயுள் காலமெல்லாம் மரணதண்டனை மாதிரி கஷ்டப்படச் செய்வது மிக இழிந்த செயலாகும். ஓர் பெண்ணுக்கு ஓர் துணைவனில்லாமல் மற்றவை கோடி கோடியாயிருந்தாலும் என்னபயன். பெண்கள் புருஷன் எச்சல் இலையில்தான் சாப்பிட வேண்டுமாம். அப்பொழுது தான் புருஷனிடம் அன்பிருக்கும் என்றும் அசட்டுப்பழக்கத்தை விட்டொழிக்க வேண்டும். அதேமாதிரி அன்பு இருக்கவேண்டுமானால் மனைவி பேரில் புருஷனுக்கு அன்பு இருக்க வேண்டாமா? பகலில் புருஷன் எச்சில் இலையில் பெண்ணும்; இரவில் பெண் எச்சில் இலையில் புருஷனும் சாப்பிடட்டும், அதில் யாரும் ஆட்சேபனை செய்ய முடியாது, பெண்கள் குடை, மிதியடி உபயோகிக்க வேண்டும், கற்புப்போய் விடுகிறதென்று யோஜிக்க வேண்டாம், குடை மிதியடி உபயோகிக்காததினால் உங்களிடம் தங்கியிருக்கிற அசட்டுக் கற்பு வேண்டவே வேண்டாம். புருடன் மனைவியை விட்டு வருடக்கணக்காக அயல் நாடுகளில் தங்குவது கூடாததாகும். உடனழைத்துச் செல்வது வாழ்க்கையில் புனிதத்தன்மையை உண்டாக்கும். சிறுவர்களை நன்கு படிக்கவைக்கவேண்டியபொருள் வசதிசெட்டிமார் நாட்டில்உண்டு. ஆனால்வி. வி.ராமன் மாதிரி, ராமாநுஜம்மாதிரி, போஸ் மாதிரி, பாரதிமாதிரிஎத்தனைபேர் இருக்கிறார்கள்? ஒருவருண்டா. கல்விகற்க ஒருசிறிதும் வேலைசெய்ய வில்லைஎன்பது விளங்க வில்லையா? பெற்றோர்கள் தங்கள் சிறுவர்களை தீயவொழுக்கங்களில் பிரவேசிக்க உதவியாக இருக்கிறார்களேயொழிய நல்வழியில் நாட்டம்கொள்கிறார்களில்லை. கிழவர்களுக்கு இளம்பெண்களை பணத்திற்கு ஆசைப்பட்டுக்கட்டிவிடாதீர்கள். அப்பெண் நீண்டகாலம் துக்கம் அனுபவிக்கும் என்பதை உணருங்கள். வயது சென்றவர்கள் சீர்திருத்த விஷயத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்து மூடபழக்க வழக்கங்களை கட்டிக்கொண்டு அழத்தான் செய்வார்கள். அவர்களுக்கு இலேசில் விட்டுக்கொடுக்கமனம் வராது. அதற்காகப்பார்த்தால் வாலிபர்கள் நீண்ட நாள் துக்கப்படவேண்டியது நேரும். புருடன் மனைவி ஒருவருக்கொருவர் அடிமை என்ற கெட்ட எண்ணம் தொலையவேண்டும். ஒருவருக்கொருவர் துணைவர் என்ற எண்ணமே உண்டாகவேண்டும். ஒற்றுமையாக இருந்து வாழ்ந்தால்தான் இன்பமாக வாழமுடியும் புத்திமதிகூறவும் எல்லாவிஷயங்களிலும், ஒருவருக்கொருவர் உதவு செய்துகொள்ளவும் இயலும். கடைசியாக சகோதரர்களே! செட்டிமார் நாட்டில் கல்வியைப் பரப்பி புதிய நாகரீகத்தை உண்டுபண்ணமுயற்சிக்க வேண்டுமென உங்களைக்கேட்டுக்கொண்டு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### வந்தனம்.

இரவு 8-மணிக்குவந்தனம் கூறப்பெற்று மாலை சூட்டி கூட்டம்இனிது நிறைவேறியது. வந்திருந்தோருக்கு சமபந்திபோஜனம் நடைபெற்றது.

---

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

புறத்தப்பட்டு, அமெரிக்கா சென்று புதிய இங்கிலாந்தை ஏற்படுத்திய கிறைஸ்தவர் பாக்ஸ, பென் (Fox and Penn) என்பாரது பின்னடியார்களை இரக்கமின்றிக் கொடூரமாய் நடத்தினர். கிறைஸ்தவரது வழக்கமே அது. அதில் வியப்பென்? இங்ஙனமிருப்பவும் கிறைஸ்தபாதிரிகள் கிறைஸ்தவ தேயங்களில் மக்களில் மக்களின் நலத்திற்காய்ச் செய்யப்பட்டுள்ள பொது நன்மைகளைக் குறித்துப் பேசித் தஞ்சமயத்தை மேம்படுத்த முற்படுகின்றனர். ஆயின் உண்மை யென்னவெனில் பெயரளவில் [Nomina ] கிறைஸ்தவ தேயங்களாயிருக்கும் நாடெனில் நாம் காணும் நலன்கள் யாவும் பெயரளவில் [Nominal] கிறைஸ்தவர்களான மக்கள் பணியை மேற்கொண்ட மேன்மக்களாலேயே செய்யப்பட்டவை. அதற்கு கிறிஸ்தவம் காரணமன்று. மக்கள் தொண்டை முதன்மைப்படுத்திய நன்மக்களை யெல்லாம் கிறைஸ்தவ சபை துன்புறுத்தியது. அவர்கள் "அவிசுவாசிகள்" "தெய்வத்தை நிந்திப்போர்" "சமய விரோதிகள்" என இழித்துக்கூறப்பட்டு பழிக்கப்பட்டனர். ஆனால் ஒரு நூற்றாண்டில் தூற்றப்பட்டோர் மறு நூற்றாண்டில் போற்றப்பட்டார். இந்தத்தொழிலில்—தூற்றுதல் போற்றுதலில்—கிறைஸ்தவ சபை முதலிடம் வகித்து வருகிறது. மக்களை முன்னேற்ற வேண்டுமென்று கூறியோரையெல்லாம் கிறைஸ்த்தவசபை இகழ்ந்து துன்புறுத்தி விட்டு பிறகு ஊரவர்கள் அப்பொழுது நலம் நாடிகளைப் புகழ்ந்து போற்றியதைக்கண்டதே கிறைஸ்த்தவ சபை மானங்கெட்டுப் போய்த்தான் இகழ்ந்த அதே வீரர்களைக் கிறைஸ்தவரென்றும் அவர்களது முற்போக்கான சேவைகளுக்குத் தனது போதனையே காரணமென்றும், வெட்கமின்றிக் கூறித் தனக்கு அடாத மதிப்பையடைந்து வந்தது. தொண்டருக்கு "புனித" என்ற பட்டத்தையும் கிறிஸ்தவசபை யளிக்கத் தயங்கவில்லை. (தொடரும்)

---

உங்கள்

கண்ணையும்

காதையும்

கவனித்துக் கொள்ளுங்கள்

## பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

## செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், சீழ்வடி [illegible]

[illegible]

"Sri" Works

Beadon St. Calcutta.

Read the
"SUPERSTITION OF KHADI"
A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.

## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330 ஞ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A, B. L,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரு. 0—5—0.

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.




## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்கு முகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோறும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—
மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யும்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்."

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் சேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

பண்டிதர். உயர் திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய
மாதர் சுதந்திரம் அல்லது

## பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)
கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

---

"பசிக்கும் வயிற்றிற்கு ஒரு கவள சாதம் கொடுக்க சக்தியற்ற சாமிகளும், சாஸ்திரங்களும் இந்நாட்டுக்கு வேண்டியதில்லை"

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆரும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0. 2—0

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமைய்யாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.